# இதயக் கீர்த்தனை

தீப்தி. கௌ

கரங்கள் பதிப்பகம்

97503 72227

karangalpublications@gmail.com

கோவை

**இதயக் கீர்த்தனை**

ஆசிரியர் : **தீப்தி. கௌ**

முதற்பதிப்பு : செப்டம்பர் 2019

விலை : ரூ. 100

கரங்கள் பதிப்பகம்

97503 72227

karangalpublications@gmail.com

கோவை - 21

# என்னுரை

உங்களை பற்றி எனக்கும் என்னைப் பற்றி உங்களுக்கும் எதுவுமே தெரியாத பட்சத்தில் கோடான கோடி புத்தகங்கள் மத்தியில் இந்த புத்தகத்தை நீங்கள் வாசித்துகொண்டிருப்பதற்கு காரணம் எதுவாக இருக்கும். நிச்சயம் இது ஒன்றே காரணமென எளிதில் யாராலும் சொல்லி விட முடியாது. அது போலத் தான் காதலும் எதற்கு எதனால் எதன்மீது யார்மீது யாரால் எதுவரை வருமென யாராலும் சொல்ல முடியாது. எது எப்படியானாலும் தற்போது நாம் இணைந்து விட்டோம், இனி வரும் பக்கங்களில் நாம் மனம் கோர்த்து பயணிக்க போகிறோம்.

முதலில் யார் மனதை யார் தொடுவது? யோசிக்க வேண்டாம் ஏற்கெனவே என் மனது உங்கள் கையில் தான் உள்ளது. நீங்கள் தொட்டு விட்டீர்கள். இது என் முறை. இனி நான் உங்களைத் தொட்டு, மனதோடு மனம் பிணைத்து என் இதயத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன். இன்னும் ஒரு பக்கம் புரட்டினால் உள்ளே நுழைந்து விடலாம். ஆனால் இதில் பெரிதாக எதுவும் இருக்காது. வெறும் இதயம் கொட்டும் உணர்ச்சி குப்பைகளை மொழிப்பெயர்த்து இப்புத்தகத்தில் கீர்த்தனையாக்கியுள்ளேன் அவ்வளவே. என்னை ஒரு உணர்ச்சி மொழிப் பெயர்ப்பாளர் எனவும் சொல்லிக் கொள்ளலாம்.

நான் ஆரம்பத்தில் ரசிக்கத் தொடங்கினேன், பிறகு காலப் போக்கில் எழுதுகளை கோர்த்து கிறுக்கத் தொடங்கினேன். இன்றும் கிறுக்கிக் கொண்டே தான் இருக்கிறேன். எழுத்து போதை தரும். எழுத்து போதையின் மயக்கத்தையும் தரும். எழுத்து அனுபவிக்காத உணர்வுகளையும் தரும். சொல்லப்போனால் எழுத்து சொர்கத்தையே தரும்.

நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த வேளையில்
"தமிழ் என்றால் அழுகும் குழந்தை கூட சிரிக்கும்.
அப்படிப்பட்ட தமிழ் உன்னை மயக்கும்.
மயக்கம் தெளிந்தால் வியக்கும்"
என முதன் முதலில் ஒரு கவிதையை இயற்றினேன். என் தமிழாசிரியையிடம் பாராட்டும் பெற்றேன். ஆனால் அதன் பிறகு பெரிதாய் நான் எதுவும் எழுதி விடவில்லை. எழுதுவதையே

விட்டுவிட்டேன். சில காலம் முன்பு நான் நடமாடும் கவி ஊற்றை சந்தித்தேன். நாளும் பொழுதும் சேர்ந்து கவியாடி, அவனிடம் வந்த எழுத்துகளின் வாடை என் மேலும் கொஞ்சம் ஒட்டி விட்டது. அதனால் தான் நானும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

நான் எழுதத் தொடங்கிய காலத்தில் யார் யாரோ வந்தனர் கவிதை இப்படி இருக்க வேண்டும் அப்படி இருக்க வேண்டும் என்றார்கள். என் கவிதையில் பல மாற்றங்களையும் செய்ய சொன்னார்கள். நான் இயற்றுவது கவிதையே இல்லை என்றும் கூட சிலர் சொன்னார்கள். பல நூல்களை வாசிக்க வாசிக்க நான் உணர்ந்தது ஒன்றே ஒன்று தான், கவிதைக்கு வரையறை என எதுவுமே இல்லை. கவிதை இயற்றுவதை விட எளிதும் எதுவுமில்லை கஷ்டமும் எதுவுமில்லை. காகிதத்தின் கனம் வாசிக்காத வரை கணிக்க இயலாத ஒன்று தான். அது கனத்து அழுத்தி வலிக்கச் செய்வதும் மிதந்து வானெங்கும் பறக்கச் செய்வதும் அதில் பதிக்கப்படும் எழுத்துகளால் மட்டுமே. கவிதை மனதை விடவும் ஆழமானது. அதில் ஒவ்வொரு முறை மூழ்கி எழும் போதும் வெவ்வேறு மனதை உணர இயலும்.

"இரு இதழ்களின் இணைப்பிலேயே இன்பம் ஈடேறும்,

நம்முடையதும் நூலுடையதும்".

புத்தகத்தின் இதழ்கள் நம்மிதழால் வாசிக்கப்பட்டு ஆன்மாவால் இரு இதழ்களும் இணையப்படுவதே அதீத மனநிறைவையும் இன்பத்தையும் அளிக்கச் சிறந்த வழியாகும். வாசித்தல் துயர்களை மறக்கடிக்கும். எழுதுதல் நம்மையே மறக்கடித்து விடும். வாசியுங்கள் எழுதுங்கள் அதன் வழியே இன்பத்தைத் தேடுங்கள்.

பெருவெளியின் சிறுதுகளாய் யாருடைய பார்வைக்கும் அகப்படாமல் இருந்த என் கவிதைகளை தொகுத்து புத்தகமாய் வெளியிட ஊக்கமளித்தும் போதிய நிதியுதவி அளித்தும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றிகள்.

நன்றி கலந்த அன்புடன்,

**தீப்தி.கௌ**

8012380120

deepthigdeepthi@gmail.com

## இரத்தல்

ஒன்றா இரண்டா எத்தனை முறை
பொருள் வேண்டி இரவோர் கூட
நாணி நொந்து நெடு தூரம் சென்றிருப்பார்கள்.

உன் அன்பு அள்ளி அல்ல
கில்லியேனும் தருதல் வேண்டி
நீயே சலிக்கும் அளவு கடந்தும்
கைகூப்பியே நிற்கிறேனே.
தரும நெறி அறியாயோ நீ.
மித மிஞ்சியதேனும் தாயேன்.

இழிவிலும் இழிவு இரத்தல்
அதிலும் இழிவு அன்பை இரத்தல்
இரந்து இரந்து இறந்தே விடுவேன் போல்.

சுரக்கும் அன்பில் அமுது வேண்டாம்
கொடும் நஞ்சையேனும் தாயேன்.

சிரித்துக் களித்து இன்புற வேண்டாம்.
விசும்பி வெதும்பி துன்புறவாவது செய்.

வெய்யோன் தோற்றம் மறைவெனக் காணாது
பொழுதெல்லாம் உன் நினைவால் வாடுகிறேனே.

மையல் அல்ல மாமனே
இது கெட்டொழியா தேன் காதல்.

கேட்டுத் தவிக்கும் உயிர்
கெட்டு விடுவதற்குள்
அன்பைக் கொட்டி விடு.

வெட்கமின்றி இறைஞ்சுகிறேனே
கடலின் ஒரு சொட்டாய்
என்னுயிர் காக்கும் திருசொட்டாய்
கொஞ்சமேனும் காதலித்து விடேன்.

உம் திரு அகத்தினுள்
பருத்திருக்கும் அன்பெல்லாம்
எனக்கானவை இல்லை எனினும்
கலப்படமற்று தான் காதல் செய்கிறேன்.
அதையேனும் அள்ளி எடுத்துக் கொள்.
சுரக்கச் சுரக்க அன்பை எல்லாம்
சுரண்டி எடுத்துக் கொள்.

செழித்த அன்பை அடைத்தல் இயலாது
என்னை அல்ல அதையாவது
அறுவடை செய்து கொள்.

❣

## நிழற்குடை

என்னுயிர் சிமிழே
திகட்டா தமிழே
ரோசா சாறே
வாலிப தேரே
செம்புல பயிரே
செங்குருதி சுவையே
வல்லின மெய்யே
என் மெய்யெல்லாம் நீயே
நீ இல்லா நான்
வெறும் வெறுமையின் உருவே.
உம் இருத்தலின் சுகம்
இல்லாமையில் ரணமே.
உம் மௌனத்தின் கனம்
தாங்காது எம் மனமே.
தேவ அமுது உன்னில்
எங்காதல் கொட்ட
எல்லாம் மாயக் குமிழியாய்
பொரிந்து விடுகிறது.
பொருத்தம் அறியாது
பொருந்த எத்தனித்து
போகத்து நிர்க்கதியாய் நிற்கிறேன்
உன் நினைவின் நிழற்குடையில்.

❣

## கொஞ்சம் நில்

என்னை நீங்கி நீ
மெல்ல நகர்ந்தாய்
பிடிக்க வந்தேன்
ஆறாய் ஓடினாய்
உன்னைத் தேடி
உன்னுள் குதித்தேன்
வற்றி ஆவியாய் மாறி
ஆகாயம் சென்று
அகால சிரிப்பு சிரிக்கிறாய்
அண்டமெங்கும் அதன் எதிரொலி
பிண்டமிழந்து ஒலியினுள் ஊடுருவினேன்
நிசப்தமயமாகி நித்திரைக்கு சென்றாய்
இருட்டாய் மாறி கனவாய் வந்தேன்
விழித்து
அழுதுவிட்டு
என் நெளிந்து சுருண்ட கூந்தலில் சூட்டாமல்
என் சமாதியிற்கு ரோசா சூட்டி
அழகுபார்த்துச் செல்கிறாய்
இம்முறையாவது கொஞ்சம் நில்
என் சமாதியில் நான் இல்லை.

❣

## இறுதி சுவாசம்

அடர் கானகத்து அருவி நீராய்
என்னைத் தழுவிச் செல்.
உன்னோடு என்னையும் அடித்துச் செல்.
பிடிமானம் ஏதுமின்றி மூழ்கடித்துச் செல்.
முடிவில்லா முக்தி நிலை தந்து செல்.
என்னுள் கரைபுரண்டு ஓடும்
காட்டாறு வெள்ளமாய் கலந்து செல்.
முடிந்தால் மொத்தமாய் என்
மூச்சையும் நிறுத்திச் செல்.
என் இறுதி சுவாசமாவது
என்றென்றும் உன்னுடைமை ஆகட்டும்.

❣

## புதைகுழி

சொப்பனமோ என
சொக்கி நிற்கிறேனே.
சொட்டுச் சொட்டாய் அதன்
மோகனம் உள்ளிழுக்க
வேர் கொண்ட விருட்சமாய்
மண் பிடித்து நின்று
சகதியின் ஆழத்தில் சிக்கியும்
வெளியேற எத்தனிக்காமல்
உள் மூழ்க வேண்டுகிறேனே.
அது என்ன விழியா
இல்லை என் வாலிபத்தை
வதைக்கும் புதிரான புதைகுழியா.

❣

## அன்பு மாமன்

பனங்காட்டு மத்தியில
கள் அருந்த போறவனே
கள்ளு எல்லாம் வேணா மாமா
நானே வரேன் தாராளமா.

ஒத்த பார்வ பார்த்து போனா
ஓயாம நான் உன் பின்ன வரேன்.

ஒயிலாட்டம் ஆடிக்கிட்டே
உன் பெண்சாதி ஆகிக்கிறேன்.

நீதான் என் ராசாவுன்னு
ஊரெல்லாம் சொல்லிடுவேன்.

அலுங்கிக் குலுங்கித் தான்
நானும் உன் முன்ன வாரேன்.
வாடி என் மயிலுனு
மாரோடு அணைச்சுக்கோவேன்.

ராத்திரி கட்டுற சீலைக்குத் தான்
உன்ன ரவிக்கையா போட்டுக்கிறேன்.
ராங்கி நானும் தான்
உன்ன இரவெல்லாம் ரசிச்சுக்கிறேன்.

காலமெல்லாம் காதல மட்டும்
காட்டு மாமா.
கட்டையில போனாலும் நீங்காது
என் நேசம் மாமா.

நெஞ்சுக்குள்ள எனைக்குமே
நீ மட்டும் தான் மாமா.

கரையாத கற்பூரமாய்
காதல தான் காட்டு மாமா.
என் தங்க மாமா.

❣

## இல்லாதது

இல்லாத ஒன்றின் பின்னும்
இல்லாது போன ஒன்றின் பின்னும்
இல்லை என மறுக்கப் பட்ட ஒன்றின் பின்னும்
இல்லாமல் அவை போகும் வரையோ
இல்லை நாமே இறந்து போகும் வரையோ
இல்லானாய் யாசித்தாலும்
இல்லாது தான் போகும்.

❣

## இளைப்பாற ஏங்கும் கள்ளி

வற்றிய ஏரியின் மகரமாய்
துளி நீர் வேண்டித் துடிக்கிறேனே.

மார்பில் பால் கனத்து
மாராப்பு தாண்டி கசிந்தும்
அதை ஊட்டச் சிசு இல்லாது
போல் இளைக்கிறேனே.

வயிற்றில் வெற்றிடம் நிரம்பியதால்
விக்கி விம்மிய குழந்தையின்
பசியின் ருசி என்றென்றும்
மறைய கள்ளிப் பால் அளிக்கும்
அன்னையாய் அழுகிறேனே.

மணவாளனின் பிடிக்கா
மனைவியாய் வாய்த்து
அன்பு நீங்கி வெறுப்பு தீண்டித்
துருப்பிடித்துப் போன மனமும்
பிசுபிசுத்துப் போன
ரணமாகா அல்குலும் கொண்ட
தாலி மட்டும் சுமக்கும்
கன்னியாய் கதறுகிறேனே.

உம் அன்பு வேண்டி அழையும்
பேதை எந்தன் அழுகுறல்
கேட்கவில்லையோ.

என்று ஏங்கும் என்னை
உன் பொன் மஞ்ச மடியில் இட்டு
இளைப்பாற்றுவாய் உயிரே.

❣

## அனாதையின் பிரசவம்

விரைந்து வருவேன் எனச் சூளுரைத்து
விசையோடு விந்து செலுத்தி சென்றாயே.

ஈர் ஐந்து மாதம் கடந்து
ஈன்றெடுக்கும் காலமும் வந்ததே.

முதுகில் வலி தொடங்கி
தொடையெல்லாம் வலி தொட்டு
இடுப்பில் வலி பெருகி
அடிவயிற்றுத் தசையெல்லாம்
இழுத்துப் பிடித்து
இடைவெளியுடன் வந்து
செல்லும் கோரமான வலி.

இத்துயரப் பொழுதிலும்
உன் வரவை எதிர்நோக்கியே வாசலில்
கண்களை பதியவைத்துள்ளேனே.

உன் கரத்தால் என் கூந்தல் கோதி
மூக்கின் நுனி தொட்டு
நெற்றியில் இலேசாக முட்டி
ஈரம் வடியச் சில்லென முத்தமிட்டு
ஆறுதல் வார்த்தை அழிப்பாய்
எனக் கனாக் கண்டேனே.

கண்ணாளன் உன் கை சேர்வதற்கு முன்னமே
கால் இடுக்கில் வழுவழுப்பாய் திரவியம்
கசியத் தொடங்கி விட்டதே.
இன்னும் உன்னைக் காணவில்லையே.

வலி உச்சத்தையும் அடைந்து விட்டது
இருந்தும் இவ்வலியை
மனவலி வென்றுவிட்டதே.

பனிக்குடமும் உடைந்து
நிலம் சேரும் அடைமழையாய்
சடசடவென உள்ளிருக்கும் நீர் கொட்டியது
அதனுடன் சேர்ந்து உதிரமும் சிந்தியது.

நீ பிரிந்த போது மறைந்த மாதவிடாயும்
இன்று என்னைத் தேடி வந்துவிட்டது.
இருந்தும் நீ என்னை வந்தடையவில்லையே.

அவ்வளவு தான் காலம் கடந்துவிட்டது
அல்குலின் தசை விரிந்து
என் பிள்ளையின் தலை வழுக்கி வெளியேறி
இவ்வையத்தில் அப்பன் இல்லா
அனாதையாய் அவதரித்து விட்டான்.

அனாதையாய் நாங்கள் இறப்பதற்குள்
இதயமில்லா என்னவனே
எங்களை வந்து சேர்.

❣

**கவிதைகள்**

தாளில் இருக்கும் கவிதைகள்
முதலில் வாசிக்கப்பட்டு பிறகு ரசிக்கப்படும்.
தரையில் நடக்கும் கவிதைகள்
முதலில் ரசிக்கப்பட்ட பிறகே வாசிக்கப்படும்.

❣

## வெறுமை நெடி

பேசுவதற்கும் எழுதுவதற்கும்
கூட இயலா நிலையில்
என்னை நிலை குலைய
செய்யும் அகோர வெறுமை.

வர்ணனை
எதுகை
மோனை
என எதுவும் அகப்படவில்லை.

எழுத்துக்கள் கூட
உந்தன்நினைவுகளைக் கடன் பெற்று
இங்குக் கக்கிக் கொண்டிருக்கிறது.

காத்தருளும் காற்றாய் மாறி
காத்திருக்கும் கன்னியைக் கருதாமல்
கண பொழுதில் காணாமல் போனால்
சுகமாய் சுவாசிக்க இயலுமோ.

உன் இல்லாமை உண்டாக்கிய
வெறுமையின் நெடி
மூச்சடைக்கச் செய்கிறது.
முதுமை எய்தாமலே
என்னை தளர்ந்து
தடுமாறச் செய்கிறது.

காய்ந்த இதயம் படைத்தவனே
என் கண்ணீரில் மூழ்கி எழுந்தும்
துளி ஈரம் ஒட்ட வில்லையா.

உயிரோடு கொண்ட பழக்கம் போல்
உனக்குப் பழக்கப்பட்டுவிட்ட நான்
பழக்கம் கெட்டதால்
பழிக்கப்பட்ட பகல் நிலவாய்
உருவற்று அழைகிறேன்.

❣

## கவி ரசிகை

கறைபடியா கலை நெஞ்சம்
கொண்ட கவிஞனே.

உன் கவிதைகளையும்
அதைப் புனையும் உன்னையும்
ரசித்தே ரசனை வளர்க்கும்
உனக்கே உரிதான
உன் கவி ரசிகை நான்.

நீயற்ற பொழுதுகளில்
உன் கவிகளின் இடையில்
இளைப்பாறி இன்புறுவேன்.
இறப்பு நேரும் நொடியிலும்
இருதயம் இளகச் செய்யும்
என் கவியின் செம்மடியில்

மடியவே இடம் கேட்பேன்.
என் கவி என்பது
தாளில் பேனா கொண்டு
நான் தாளமிடுவது அல்ல
தாழ் இட்ட மனதைத் தட்டி
திறந்த உன்னைக் குறிப்பிடுவது.

உன் ரசிகையாய்
வாசகியாய்
நேசகியாய்
காதலியாய்
எல்லாமுமாய்
நான் இருப்பேன்.

கவிஞனின் காதலி கவிதையே.
நாள் தவறாமல் உனக்கு சில
காதலிகளைப் பரிசளிப்பேன்.
பிடித்தவள்களை வைத்துக் களித்துக் கொள்
எஞ்சியவள்களுள் குறை கண்டு
என்னிடம் கடிந்து கொள்.

சில நொடி கழித்து
அவைகளைக் களைந்து
சில வரி சேர்த்து ஒன்றாகக் கோர்த்து
என் கவியை நம் கவியாக்கு.

காதல் வந்தால்
கவி பாடி கொஞ்சிக் கொள்ளலாம்.
கோபம் வந்தால்
கவியாடித் திட்டிக் கொள்ளலாம்.
கவிஞை யான் பெற்ற பெரும் வரமே
நான் ரசிக்கும் கவிஞன் உனக்கு
காதலியாய் வாக்கப்பட்டு
மனதில் மட்டுமின்றி
கவிதைகளிலும் சுகமாய் சுமப்பதே.

❣

## நீ

சொல்லுக்கும் நீ!
என் செல்லமும் நீ!

எழுத்துக்கும் நீ!
என் ஏகாந்த இன்பத்துக்கும் நீ!

கவிதைக்கும் நீ!
என் கல்வெட்டுக்கும் நீ!

மொழிக்கும் நீ!
என் மோகனத்துச் செழுமைக்கும் நீ!

சங்கத்தமிழுக்கும் நீ!
என் சந்திர சமயத்துக்கும் நீ!

சக்திக்கும் நீ!
என் சகலமும் நீ.!!!

❣

## முடிக்கப்பட்ட முடிச்சுகள்

இவ்வண்டத்தில் எதிர்பாராது
இணைந்த அணு துணுக்கினுள்
பூண்ட உருவற்ற உயிரின்
ஏகாந்தத்தை அறியும்
கடவுச் சொல் நீ.

பரிவுகள் அற்ற பிரிவுகள் ஊடுருவி
மனம் பிதற்றி
நீ மறக்கப்பட்டால் கூட
நான் என்பதே வீணே.

அகப் பக்கங்களின்
அறியப்படா இரகசியங்கள் பல
அறியாது களைவதென்பது
அண்டத்தை அடைத்திருந்த குப்பையே.

மாராப்புக்குப் பின் மட்டுமல்ல
ஒவ்வொரு மர்மத்திற்கு பின்பும்
ஒரு அழகியமும்
படைத்தலுக்கான அவசியமும்
நிச்சயம் இருக்கும்.

அதுபோலத் தான்
நீயும் நானும்
நம் படைப்பு நமக்கானவை.

இடைவெளி இல்லாமல்
காதல் பூச்சிட்டு இணைவதற்கெனவே
ஈருடலாய் படைக்கப்பட்டவை.

நம் ஆத்ம முடிச்சவிழ்த்து
முக்தி ஏந்தி
முழுமை பெறவே அவதரித்த
இணைந்து முடிக்கப்பட்ட
மர்ம முடிச்சுகளே நாம்.

❣

## கணித ஆர்வம்

காய்ந்து கிடக்கும் இதயத்தில்
கிடப்பில் கிடந்த கணித ஆர்வமெல்லாம்
கனிந்துவிட்டது..!
பகிர்ந்து புசிக்கலாம் வா...!
வா…! ஓடோடி வா...!
அழகை மறைக்காமல்
மழலை போல வா…!
என் இதழை
உன் செவ்வாயில் ஊறும்
செந்தேனால் நனைத்த
இதமோடுஒத்தடம் இடக்  காத்திருக்கும்
உன் மச்சங்களைத் தேடி தேடிக் கணக்கெடுத்து
கணிதம் வளர்ப்போம் வா...!

❣

## நங்கையின் நாதன்

நிலவுருகி கொட்டிய அருவியில்
அகப்பட்டிருக்கும் உருண்ட அண்டம் போன்ற
விழி கொண்டோன்
கோடி மகரந்த கூழ் கூட்டிச் செய்த
வியர்வை நெடி கொண்டோன்.

உள்ளத்தினில் நுண்ணிய உக்கிரமும் இல்லாமல்
நுனிப் புல்லிற்கும் குளிர்வூட்டும்
பகலின் பனித்துளியால் ஆன
நெஞ்சங் கொண்டோனை
கண்ட கணமே
கறும்புசாற்றில்
சிக்கிய சில்லொறும்பாய்
காதலில் மூழ்கி
உயிரின் கற்பும் உரசாது பறிபோனது.

நகைவிக்க உயிர்த்த நாதனின் மனையாளாய் மாற
நாணம் விற்று நாடிச் சென்று
கண் இமையைக் காதல் பா படிக்க
தூதனுப்பி விருப்பம் உரைத்தேன்.

அமுதினும் சிறந்ததோர் அன்பு வேண்டும்.
அழகினும் மோகமூட்டும் போதை வேண்டும்.
அகிலத்தினும் பெரியதோர் காதல் வேண்டும்.
இவ்வனைத்தும் ஓர் உயிரிடத்திருந்தே
வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தான்.

இருண்ட ஞாலத்தின் ஞாயிறாய் உதித்ததினால்
எழுந்த காதல் ஒளியினை
கவியாய் இயற்றி நிரூபிக்க முற்பட்டேன்.
உணர்ச்சிகளின் உயிருள்ளதே ஒழிய
உன்னுயிர் இல்லை என நிராகரித்தான்.

பாவை என்னுள் எழுந்த பாச பாற்கடலை
பாவாய் தொடுத்துப் பாடினேன்.
காதலின் ஒலியுண்டு
உன்னுயிரின் ஒலி இல்லை என நிராகரித்தான்.

காற்று சீறிச் செல்லும் எங்குழலை பிய்த்து
கடைசி சுவாசத்தினால் நாதம் இசைத்தேன்.
உயிரின் ஒலி கண்டேன் எனக் கண்ணசைப்பில்
குறுங்காவியம் படித்தான்.
பார்த்துக் கொண்டே இப்பாரினை கடந்தேன்.

காதல் காட்டி மறைந்த காரிகை
என்னைத் தேடி வானுலகும் வந்தான்.
வையத்தில் தரித்த காதலால்
வானுலகில் கரம் கோர்த்து
யுகங்கள் தீர அகங்கள் பிணைத்து
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

❣

## நாயானேன்

நீயற்று நாதியற்றாளாய் கிடந்தேன்
நீ வந்ததால் நாயகியானேன்
காதலும் சேர்ந்து வந்ததால்
நாயாகிப் போனேன்

❣

## முட்டுச் சந்து

தினமும் நடக்கிறேன்.
என் வீடு
அதன் வாசல்
நான் போட்ட வண்ணமில்லா கோலம்
அடிக்கடி வண்டிகள் வெட்கம் இல்லாமல்
முத்தமிட்டுக் கொள்ளும் சாலை
பல மாந்தர்கள்
சில மரங்கள்
என எல்லாவற்றையும் கடந்து செல்கிறேன்.
இருப்பினும் உன் நினைவுகளின் முட்டுச் சந்து
என் பயணத்தை மொத்தமாய் முடக்கி விடுகிறது.

❣

## எது காதல் ???

எது காதல்...
கரம் கோர்த்து
கட்டுடல் குலைய அணைத்து
கால் பிணைத்து
களைப்படையக் களியாட்டம் ஆடுவதா.
நிச்சயம் இல்லை.

நீயற்ற நான்
நாண் அற்ற வில் என எண்ணி
செத்து மடிவது
மட்டுமா காதல்.

இறந்து விட்டால்
என் சன்னதி வந்த காதலும்
என் போல் அனாதையாய்
போய்விடுமென உணர்ந்து
செத்த மனதோடு
உயிர் வாழ்தலும் காதல் தான்.
அமாவாசை என அறிந்தும்
மதியரசன் வரவுக்கென
வண்ண வானமும் வெளுத்து இருட்டி
விண்மீனால் அலங்கரித்துக் காத்திருக்குமே
அதுவும் காதல் தான்

குத்திய முள்ளை
திட்டி தூரம் எறிந்தாலும்
யாரும் உடைத்து வீசுவதில்லை.
யாரையாவது மீண்டும் குத்தி கிழிக்காமல்
வாழ்ந்துவிட்டுப் போகட்டும்
எனத் தள்ளிப் போய் விடுவோமே
அதுவும் கூட காதல் தான்.

நம் நாற்றம் பிடித்த மனதின்
வாடையை அறியாமல்
பைத்தியக்காரன் பச்சிளம் பிள்ளை போல்
புன்னகைத்துக் கொண்டு
கட்டி அணைக்க வருவானே
அதுவும் காதல் தான்.

காதல் வந்தால் பைத்தியகாரனும்
பல்லக்கில் வரும் ராஜா தான்

காதல் ஒரு புதிரான மொட்டு
அது எங்கு மலரும்
எங்கு உதிரும்
என யாரும் அறிய இயலாது.
மலர்ந்தாலும் உதிர்ந்தாலும் காதல் காதலே.

மக்கி மண்ணாய் போனாலும்
என்னை அழுகச் செய்தது கூட காதலே
என்ற அர்த்தமில்லா பூரிப்பு
நிச்சயம் காதலால் மட்டுமே
உண்டாக்க இயலும்.

காதலர்கள் பிரிந்தாலும்
என்றுமே காதல் பிரியாது.

❣

## அழிக்கப்பட வேண்டிய ஆயுதம்

பெண்ணின் தூய்மை
வெண்ணிற விரிப்பில்
செய்யும் முதற் புணர்ச்சியில்
சிந்தும் உதிரத்தில் என்றார்கள்.
ரத்தம் சிந்தி
தூயவள் என்னும் பட்டம் பெறச் சொல்கிறார்கள்
இந்த பைத்தியக்கார மாந்தர்கள்.
பெண் பிள்ளை எனில்
குதிக்காதே ஓடாதே கனம் சுமக்காதே
எனச் சொல்வதெல்லாம்
பாசத்தினால் அல்ல
விற்றுப்போகாதோ என்ற பயத்தினால் தான்.
ஒரு இரகசிய இரவில்
நிரூபிப்பதற்கென பெண்மை அல்ல.
அப்படி தான் அவளைப் பரிசோதிப்பர் எனில்
அந்த பாரபட்சத்தின் உச்சமான
கன்னிச்சவ்வைப் பிறப்பிலேயே
கிழித்து விடலாம்.
அப்படியேனும் பெண்ணை
அடக்கி வைக்கும் ஆயுதம்
அடியோடு அழிக்கப் படட்டும்.

❣

## எண்ணத் தவளைகள்

பகலெல்லாம் என் எண்ணத் தவளைகள்
உன் நினைவின் மீது தாவிக் குதித்துத்
தள்ளாடிக் கொண்டிருக்கும்
இரவில் நிலை கொள்ள இயலாது
கவிழ்ந்து மூழ்கியே விடும்.
மூச்சடைத்து இறப்பதற்குள்
மறுநாள் விடிந்துவிடும்.
இப்படியே தவித்தலிலும் பிழைத்தலிலுமே
தவளைகள் வளர்ந்து கொண்டிருக்கிறது.
அன்று உன்னால் தரப்பட்ட தீனி தடைப்பட்டதால்
முளைத்த தவளைகள் தான் இவை.
பசிக்கப் பசிக்கப் பெருத்துக் கொண்டே போகிறது.
மீண்டும் நிறைவாய் தீனி இடு
இட்டுக் கொண்டே இரு.
தின்று
செரித்து
இளைத்து
சன்னமாய் சிறுத்து
இனிமையாய் இறந்து
இல்லாமலே போகட்டும்.

❣

## தீரா ஏக்கம்

வெளிச்சமும் இருட்டும் புணரும்
அந்தஇரவின் முற்பகுதி போன்று
அழகாய்
பேரழகாய்
என் வானின்
வண்ண விளக்காய் இருந்து
சட்டென மறைந்து
இருண்டு
எங்கு ஒழிந்திருக்கிறாய்.

ஒளிர் விடும் ஞான ஒட்பம்
திடீரென எய்தி
மிளிர்வென்றிருந்த நம்மை மறந்தாயோ.

காணுமிடமெல்லாம் காட்சி சிற்பமாய்
தோன்றி மறைந்த நாட்களெல்லாம்
நவீன பாரின் சிறு பாகம் தானோ.

கண்ணீரால் குளம் செய்து
அதைச் சலித்து காதல் காண எத்தனித்தேன்
சல்லடையெல்லாம் வெறும் ஈரம்.
ஈரம் வற்றாதோ
என் ஏக்கமெல்லாம் தீராதோ.

## பைத்தியக்காரனின் செருப்பு

வரமொன்று கிடைப்பின்
நான் பைத்தியக்காரனின் செருப்பாகத் தான் மாறுவேன்.

இளம் இளவரசியாய் உச்சியிலிருந்தவளை
விரும்பி தீண்டப்பட்ட நாள் முதல்
அவளால் சுகமாய் சுமக்கப்பட்டாலும்
அவள் பசுந்தோலை தேய்த்து
வாசலின் மூலையில் வீசப்பட்டு
அவள் ஊனமுற்ற பின்
தெருவோரத்தில் வீசப்படுவாள்.

தப்பித் தவறி அந்த உடல் செத்தவள்
பிச்சைக்காரனின் கையில்
குப்பையோடு குப்பையாய் கிடைத்தால்
அவனின் சொர்க கூடாரத்தின் தலைவியே அவள் தான்.

கைக்குக் கிடைத்து விட்டாளென
கால் கொண்டு மிதிக்க மாட்டான்.
கரம் கொண்டு பற்றி
சமயங்களில் கைகளுக்கு
அணியாய் இட்டுக் கொள்வான்.

சில சமயங்களில் ஆடம்பர ஆரமாய் எண்ணி
கழுத்தில் அணிந்து ஆனந்தமடைவான்.
இன்னும் சில நேரங்களில்
மடியில் இட்டுப் பாட்டுப் பாடுவான்.
அன்பின் உச்சத்தில்
ஓரிரு முத்தங்கள் கூட அவ்வப்போது தருவான்.
இப்படியாற் பட்ட தெளிந்த நேசத்தை
உங்களால் காட்ட இயலுமோ.

அவனின் செருப்பாய்
ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும்
அதுவே போதும்.

இதுவே எனக்கு மிகையே
என்னால் இவ்வன்பிற்கே ஈடேற்ற இயலாது.
உச்சம் குளிர்ந்து
அவனவளாய் ஆன நாளே
உயிர் தொலைத்து விடுவேன்.

❣

## ரசித்துக் கொண்டிருக்கிறேன்...

உன் கால்களை தழுவ போட்டியிடுபவள்களுள்
நானும் ஒருத்தி.
உன் குளிருக்கு இதமளிக்க முயற்சி செய்பவள்களுள்
நானும் ஒருத்தி.
உன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை
முத்தமிட காத்திருபவள்களுள்
நானும் ஒருத்தி.
உன்னை உரசிச் செல்ல
வரிசையில் நிற்பவள்களுள்
நானும் ஒருத்தி.

இருப்பினும் என்னை முந்திக் கொண்டு
அந்த அலை அழகிகள்
உன் கால்களை தழுவி விடுகிறாள்கள்.
தீயின் அனல் பாவைகள் உன்னை அணைத்து
இதம் அளித்து விடுகிறாள்கள்.
மழைத் துளி மங்கைகள்
உன்னை முத்தத்தில் நனைத்தே விடுகிறாள்கள்.
காற்று கிராதகிகள் உன்னை உரசி
உஷ்ணம் ஏற்றி விடுகிறாள்கள்.
நான் வரிசையின் கடைசியில்
உன் கடைக்கண் தரிசனத்திற்காக
காத்திருப்பது கூட அறியாது
நீ அவள்களை வர்ணித்துக் கொண்டிருக்கிறாய்.
அதையும் நான் ரசித்துக் கொண்டிருக்கிறேன்.
உன் ரசிகையாக.

❣

## அவனும் நானும்

நானென்பதும் அவனென்பதும்
மிளிரும் நிலவும்
தேங்கிய குளமும் போல
வானத்து நிலவு அவனை
வான் அறியாது
நித்தமும் என்னுள்
அகப்படுத்திக் கொள்கிறேன்
பிம்பமாக.

❣

## சிவப்பி

புலராத பகலொன்றில்
உலர்த்தா ஈரக் கூந்தலைச் சிலுப்பி
சில்லென நீரை உன் முகமதில் பரப்பி
பரந்த மார் மேல் என்னை அழுத்தி
நாடி துடிப்பை ஒன்றாக நிறுத்தி
இதழ் மறைக்கும் மீசை இழையை விலக்கி
மேல் இதழ் மெல்லக் கவ்வி
கீழ் இதழ் கொஞ்சம் கடித்து
அழுங்காமல் அதை இழுத்து
சூடாகச் சுவைத்து
ஒருசேர ஒற்றி எடுத்து
காபியை ஊற்றி கொடுத்து
உன்னை எழுப்ப
என் வெட்கமும் சற்று கசிந்து
கருப்பி நானும்
கன்னச் சிவப்பில்
தினந்தினம் சிவப்பி ஆகிவிடுகிறேன்.

❣

## சித்தமெல்லாம் சிவனே

நெற்றிக்கண் கொண்டோனே
எத்தவம் புரிந்து
உம் பாதியாய் மீதியாய்
சக்தியாய் அவதரிப்பேனோ.

அகிலமெங்கும் அடர்ந்திருக்கும்
உம்மை எஞ் சிறு அகத்தில் அடக்கி
மெய்யின் உள்ளமை மறந்து
பரவச நிலை எட்டி
பக்தி பன்மடங்கு பெருகி
அதீத அன்பும் அழகாய் முகிழ்ந்தது.

அம் முற்றிய காதல் மலரை முத்திட்டு
உதிரம் சிந்தப் பறித்து
உயிர் கொண்டு தொடுத்து
மாலையாய் உம் கழுத்தில் இட்டு
பற்றோடு போற்றிப் பாடி
அன்பை உருக்கி ஊற்றி
அனுதினமும் ஆராதித்து
எம்மை ஏற்கச் சொல்லி
நின் திருப்பாதங்கள் முன்
மண்டியிட்டு வேண்டுகிறேனே.

முக்கண்கள் கொண்டிருந்தும்
குருடனாய் நடிப்பதேனோ.

ஒற்றைக் கண்ணாவது திறந்து
தரிசனம் தராது தண்டிக்கும்
காரணி என்னவோ
என் ஐயனே.

❣

## தட்டு நிறைந்திடும்

பணமோ அன்போ
இல்லாமையின் துயரால் துடித்து
தன்மானங் கெட்டு
கரம் நீட்டி யாசித்தால்
தட்டு நிறைய ஏமாற்றம்
மட்டுமே மிஞ்சும்.

❣

## மானங்கெட்ட மனம்

மானங்கெட்ட மனமே
எங்கிருந்து நீ சாகா சாபம் பெற்று வந்தாய்
சிதைத்துக் கொன்றாலும்
கொன்றவரை கொஞ்சுவதற்கெனவே
மீண்டும் முளைத்து
என்னையேன் அம்மணமாக்குகிறாய்.

என்னுள் என்னால் ஆனவளே
வாசல் நுழைவதற்கு மட்டுமின்றி
போவதற்கும் தான்.
தட்டிய போது திறந்தது போல்
போகும் போதும் வழியனுப்பி
மொத்தமாய் கதவடைத்து விடு.

கொஞ்சமேனும் தன்மானம் கொள்
வாசலைத் தாண்டும் போதெல்லாம்
கண்ணீரால் கால் கழுவாதே
நீரில் வழுக்கி உள்ளே விழுந்தாலும்
காய்ந்த பின் கடந்து விடுவார்களென அறி.

ஒருமுறை கடந்துசென்றோர்
மீண்டும் இப்பழைய வீட்டின்
கதவைத் தட்டமாட்டார்கள்.
கதவு திறந்தே கிடந்தாலும்
உள்ளே நுழைய மாட்டார்கள்.
புதுமைகளின் வண்ணக் கவர்ச்சி
பழைய வெளுத்த உன் சுவர்களில் இல்லை.
உன்னிடம் வந்த வாமை வாடை
இந்நேரம் துர்நாற்றமாகி இருக்கும்.

இத்தனை மெய்கள் உன்னைச் சூழ மொய்த்தாலும்
ஏன் பிரபஞ்ச ஆழத்திலிருக்குமொரு
பொய்யை மெய்ப்பிக்க முயல்கிறாய்.
உன்னை வளர வளர வேர் பிடுங்குவோருக்கு
ஏன்
மலர்ந்து
காய்த்து
கனிந்து
உணவாகி
வெட்டு வாங்கிக் கொள்கிறாய்.

யாரோ ஒருவருக்காக
நீ ஒவ்வொரு முறை சாகும் போதெல்லாம்
வலிப்பது எனக்கு மட்டுமே.

மீண்டும் நீ இறக்க நேர்ந்தால்
மீண்டும் நீ பிறக்க நானிருக்க மாட்டேன்.

❣

## தீட்டாகி விடும்

உம் பெயருக்கு அடுத்து
உம் சாதி பெயரா
உன் அப்பனுக்குப் பிறந்தாயா
அல்ல சாதிக்கா?
சாதிக்கென்றால் அதில் யாருக்கு?
பெரியார் பெற்றுத்தந்த பெயரை
இன்னும் எவ்வளவு நாறடிக்க போகிறாய்.
சாதி சார்பற்றோரென
மார் தட்டிய காலமெல்லாம்
மலையேறப் போகிறது.
இனி தட்ட மாரின் மயிரை தவிர
ஒன்றும் மிஞ்சப்போவதில்லை.

கேவலம் உனக்கென
ஓர் அடையாளத்தை கூட
சொந்தமாக்கிக் கொள்ள இயலா
வீணின் விருட்சமா நீ?
சாதியின் சொந்தக்காரனே
எங்கள் சார்பினை துண்டித்துவிடு
இனி விதைப்பது முதல்
கழிப்பது வரை
நீயே அறுவடை செய்துகொள்.
எங்களை ஒட்டி உரசும் காற்றினையும்
பட்டு வழியும் நீரினையும்
தீண்டாதே தீட்டாகி விடும்.
இனியேனும் தீட்டின்றி
சாதியைக் காத்து
இன்புறு வாழ்வாயாக!!!

❣

## பிம்ப நாடகம்

அன்பரே நீ என் அன்றாட தேவை.
நீ விட்டுச் சென்ற வெறுமையை
உன் நினைவின் பிரதிபலிப்பால்
உண்டான பிம்பத்தை வைத்தே
ஈடுகட்ட முயன்று கொண்டிருக்கிறேன்.
அனுதினமும் அதனோடு அளவில்லாது
உரையாடிக் களிக்கிறேன்.
உன் மௌனம் தரும் விடத்தை
அதன் இருப்பே நீக்கிச் செல்கிறது.
நீ அன்று பேசியதை போலவே
இது இன்றும் பேசுகிறது.
சமயத்தில் நீ வந்துவிடுவாய் என
ஆறுதல் மொழி கூடச் சொல்கிறது.
உன் பிம்பம் உன்னைப் போல் இல்லை
இது மிகவும் மெல்லிய மனம் படைத்தது.
நீ வரும் வரை இதனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
இருப்பினும் உனக்கும் உன் பிம்பத்திற்குமான
வேறுபாடு அறியாமல் போகும் முன்னேனும்
திரும்பி விடேன்.

❣

## திருஷ்டி கழித்தல்

உன் சிறுத்துப் பருத்த
ஊதா சிவப்பான உதடுகள்
இயல்பைவிடக் கொஞ்சம் கூடுதலாகக் குவிந்தும்
ஈர்க்கும் மழைபெய்தோய்ந்த ஈரநிலமாய் நனைந்தும்
கொய்தலுக்கு வேண்டியே
அதிமிருதுவாகவும் அமையப்பெற்று
சுற்றுத் தடுப்பாய் தாடியும் மீசையும்
காடென வளர்த்து நீ மறைத்தாலும்
மதியெல்லாம் உன் மார்க்கமாய் கொண்டு
வழிப்படும் மங்கையின்
விழிபடாது தப்ப இயலுமோ.
கண்பட்ட கண்ணனே
உன் திருவிதழின் திருஷ்டியை
என்னிதழ் கொண்டு
கடித்துக் கழிக்கட்டுமா.

❣

## அவன் அழகன்

பூவைப் பிழிந்து எடுத்த சாற்றில்
ஊற வைத்தெடுத்த
தேன் தேகமும்.

கனிந்த குட்டி கனி கன்னமும்
மகரந்த துகள்கள்
ஒன்று இரண்டு முகத்தில் பருக்களாகவும்
ஊசி இலை மீசையும்
இலகுவான இழையும்
பனி உருக்கும் பேச்சும்
அவனுக்கே உரிதான
அவன் மலர்கரம் பட
எனக்கென புனையும் கவிதைகளும்
வையத்தின் வனப்பு கூட்ட
அவதரித்த அற்புதங்களாகும்.

❣

## ‘அவன்’ குறிப்புகள்

மெல்லிய தென்றலுக்கு நடனமாடும்
கலாப மகுட இழை கொண்வன்.

நிலவில் தஞ்சம் புகுந்த கறுத்த வானமய்
கவி பேசும் கண்கள்.

விண்மீன்கள் விரும்பி சிறைப்பட்டு
ஒளி வீசும் பார்வை.

அங்குல அங்குலமாய் அளவெடுத்துச்
செதுக்கிய சிலையாய் நாசி.

திராட்சை நிற ஒற்றைச் சிப்பியில்
அடுக்கடுக்காய் அமர்ந்திருக்கும்
முப்பத்திரண்டு முத்துகள்
குவிந்த செவ்விதழ்கள்.

பொங்கும் அழகைத் திரையிட்டு
மறைப்பதாய் எண்ணி நீ வளர்க்க
அதுவும் உனக்குக் கைக்கொடுக்காமல்
பொங்கிய அழகை அருவியாய்
வழிந்தோட செய்யும் தாடி.
குழந்தை முகத்திலும்
அள்ளும் ஆண்மை சேர்க்கும்
அடர்ந்த கறுத்த கரும்புத் தோட்டமாய் மீசை.

புல்லாங்குழலை விழுங்கியதைப் போன்ற
குறுகி நீண்ட தொண்டைக் குழி.

குட்டி தென்னை போன்ற உடல்.

வெட்கம் கலந்து உன் இதழ்
மேல் நோக்கி வளைய
காண்போர்க்குப் போதை ஏற்றும் புன்னகை.

மோகினியையும் மயக்கும்
இயற்கையின் ஏகாந்த எழிலனடா நீ.

❣

## காதலும் காமமும்

காதலும் காமமும் ஒன்றல்ல
இருப்பினும் ஒன்றின்பால் ஒன்று
இணைந்தவையே.

காமம் அற்ற காதல்
இனித்தாலும் தித்திக்காது
காதல் அற்ற காமம்
உடல் சுகமளித்தாலும்
உள்ளச் சுகம் அளிக்காது

காதலில்லா காமம்
உப்பில்லா ஊறுகாய் போலத் தான்.
எவ்வளவு தின்றாலும் ருசிக்காது.
காமம் வெறும் உடலுக்குத் தான்.

அதில் தர்மம் அதர்மம்
பத்தினி தேவடியாள்
இதெல்லாம் எங்கிருந்து வந்தது.
ஒருவனுக்கு ஒருத்தி
ஒருத்திக்கு ஒருவன்
இதெல்லாம் எதற்கு?

இவையை கருதி நம்மை நாமே வருத்தியும்
ஏமாற்றியும் கொள்கிறோம் அவ்வளவே.

மனது மிகச் சிறியது.
அதில் இருக்கும் ஒருவர் இறக்கும் வரை
அது வேறு யாரையும் அனுமதிக்காது.

ஆசை அப்படியல்ல
அட்சயப் பாத்திரம் போல்
தீரத் தீரப் புதிதாய் முளைக்கும்.

உடல் சூடு தணிவதற்கு
எந்த நீரில் மூழ்கினால் என்ன?
கலவியும் கால் தூசே
அதைக் கடந்து காதலில் தேட
இன்னும் பற்பல பாதைகள் உண்டு
அதில் பயணித்து
இன்பத்தைப் பருகும் வழியைப் பாருங்கள்.

❣

## ஒன்றரைத் தலை காதல்

எங்களுக்குள்ளான உறவு கொஞ்சம்
மற்றவரின் புரிதலுக்கு அப்பாற்பட்டதே.
அவன் என் காதலன் தான்
இருந்தும்
நாங்கள் காதலர்கள் அல்ல
நான் அவன் காதலியும் அல்ல
என் காதல் கூடவும் இல்லை
எங்கள் காதல் பிரியவும் இல்லை
இது ஒருதலைக் காதலும் இல்லை.
என் தலை மொத்தமும்
மூழ்கிக் கிடப்பது காதலில் தான்.
அவன் தான் சரிவரக் காதலில் தலையிடுவதில்லை.
வேண்டுமெனில் ஒன்றரைத் தலை காதல்
எனச் சொல்லிக் கொள்ளலாம்.

❣

## எழுதி தீர்க்கிறேன்

உன் வியர்வை நெடி நுகர்ந்திட
நூறு வேதங்கள் படைத்திடுவேனே!

உன் பாத அசைவளிக்கும் ஒலி கேட்டிட
அருள் ஆயிரம் பெற்றிடுவேனே!

தசையினுளிருந்து தோளின்
என்புகள் எட்டிப் பார்த்திடக்
களிப்பில் நிறைந்திடுவேனே!

மயில் விழியால் உற்று நோக்கிட
நானும் உன்மத்தம் கொள்வேனே!

நெற்றியின் மத்தியில் அழுந்த முத்திட
நான் மோட்சம் அடைந்திடுவேனே!
அனுதினமும் அனுபவிக்காமல்
ஆசையெல்லாம் எழுதித் தீர்த்தே
என் ஆயுளையும் தீர்த்திடுவேனே!

❣

## சொல்லாதீர்கள்

குறை சொல்லுங்கள்
பிழை சொல்லுங்கள்
விசாலமாக விமர்சியுங்கள்
கவிதையே இல்லையெனக் கூடச் சொல்லுங்கள்.
ஆனால் ஒருபோதும் கவிஞர்களின் எழுத்துகளில்
இதற்குப் பதில் இதை எழுதியிருக்கலாம்
என அறிவுரை சொல்லாதீர்கள்.
அது உன்னவர் உனக்கு ஏற்றவர் இல்லை
அதனால் என்னவரைக் கட்டிக்கொள்
எனச் சொல்வது போன்றதாகும்

❣

## சீக்கரம் வாயா

ஊளி மீனா
நழுவி போகாதய்யா
உழி பொழுதா
நொடியெல்லாம் கழியுதய்யா
பொழுது விடிஞ்சு
வாச தெளிச்சாலும்
மண் எல்லா
ஓ மணம் தா(ன்) யா..
எட்டுப் புள்ளி கோலத்து லையும்
எ ராசா ஓ முக(ம்)ந்தா தெரியுதய்யா.
முங்கி எழ ஆத்துக்குப் போனா
ஆத்தாங்கர மணலெல்லாம்
ஓங் கதை தான் பேசுதய்யா.
அந்தி சாஞ்சு விளக்கு வச்சும்
வேங்க உன்ன காணோமே யா.
பூக்காத பூங்கொத்தா
சமஞ்சும் உம் பந்திக்கு வாராம
பொறப்பு பொருட்படாம போகுதய்யா.
மாமன் உன்ன நெனைச்சு
வெசனம் பிடிச்சு கிடக்கிறே யா.
மரிச்சு போற முன்ன
மஞ்ச பூசிக் குளிச்ச முகத்துக்கு ஒப்ப
ஒரு மஞ்சக் கயிறு வாங்கிக்கிட்டு வாயா.

❣

## அழகை அறிந்தேன்

அவன் கரம் உரச
என் மேனியெல்லாம் சந்தன மணம்.
அன்றே அறிந்தேன் அவன் சந்தன மரம் என்று.
அவன் கண் பார்க்க
என் கன்னமெல்லாம் சிவப்பு வண்ணம்.
அன்றே அறிந்தேன் அவன் மாதுளை கனி என்று.
அவன் சுவாசம் வருட
என் நெஞ்சமெல்லாம் சுக தாளம்.
அன்றே அறிந்தேன் அவன் மன்மத மயில் என்று.
அவன் எச்சில் தெறித்திட
என் தேகமெல்லாம் தேன் ராகம்.
அன்றே அறிந்தேன் அவன் தேவ குழல் என்று.
அவன் இதழ்கள் நகைத்திட
என் விழியெல்லாம் வெள்ளி நிலவின் வர்ணம்.
அன்றே அறிந்தேன் அவன் செழித்த செகம் என்று.
அவன் கண்ணில் நீர் வழிய
என் உயிரெல்லாம் ரணம்.
அன்றே அறிந்தேன் அவனே எந்தன் வாழ்வு என்று.

❣

## ஊன் கோவில்

எந்தன் விலா என்பை உருவி
விரல் விசையால் உந்தன்
உருவச் சிலையொன்று வடித்து
தலைமயிர் கொய்து கூரையாய் செய்து
தோல் சீவி ஆடை அணிவித்து
உனக்கொரு ஊன் கோவில் நிறுவி
நானே பூசாரியாய் பூசித்து
உள்ளே கையேந்தும் பக்தையாகவும்
வெளியே கையேந்தும் பிச்சைக்காரியாகவும்
நானே இருந்து
நரபலியாகவும் என்னையே தந்து
செழிப்புற்ற செங்குருதி கொட்டச் செத்து
ஊனற்ற சேவகியாய்
உன்னையே சரணடைந்துவிடுகிறேன்.
என்னை ஏற்றுக்கொள்வாயாக!!!

❣

## இன்பமாய் இருந்துவிடு

அடேய் அன்பானவனே!
இடுகாட்டில் இட்டு எரித்தாலும்
சாம்பலாகா காதல்
தரித்திருக்கும் பாவத்தினால்
நடுநிசியில் நித்திரை இழந்து
உன் நினைவுகளில் உலாவி
என்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

தேடிக் களைப்பதற்குள்
தேளாய் கொட்டுகிறது
உன் மௌனத்தின்  மொழிகள்.

சட்டெனப் புன்னகைக்க வைத்து
மறுகணமே சவுக்கில் அடித்து
சதை குழையச் செய்வதைப் போல்
வந்து செல்கிறது உன் பிம்ப கனிகள்.

என்னுள் எங்கும் படர்ந்து கிடக்கிறாய் நீ.
துண்டாக வெட்டி எறிந்தால்
இங்கு இறக்கப்போவது கொடியல்ல
அதைச் சுமக்கும் மரம் தான்.

போ போய் விடு எப்படியேனும்
விட்டுச் சென்ற உன்னவளுடன்
உடனடியாய் இணைந்து விடு.
உருகிக் கிடக்கும் உன் உள்ளத்தை
உன்னவளால் உறைய வைத்துவிடு.

இப்படி இடி விழுந்தாற் போல்
இடிந்து கிடக்காதே.
இடிந்து கொண்டிருப்பது நீயானாலும்
இறந்து கொண்டிருப்பது
என்னவோ நான் தான்.
எவளோ ஒருத்தியுடன்
இன்பமாய் இருந்துவிடு.

அப்படியேனும்  அன்பிற்கு ஏங்கும்
உன் நெஞ்சம் நிறைந்து
என்மீதும் கொஞ்சத்திலும் கொஞ்சமாவது
அன்பு செலுத்தப்பட்டு
என்னுள் இருக்கும் வெறுமையும்
விரட்டி அடிக்கப்படட்டும்.

❣

## உந்தன் யாசகி

உன் சகி
இன்று யாசகி
உன்னை யாசிக்கும் யாசகி.
என் உயர் நீட்சி பெற ஈகையிடு.
கன்னி என் கண்ணியம் கெட்டு
நித்தம் வருடும் கிரணம் போல்
தினந்தினம் உன்னிடத்து
வெட்கம் விட்டுக் கையேந்துகிறேனே
கண் தெரியவில்லையோ.
காதலைக் கொட்டி தர வேண்டாம்.
மிஞ்சியதைப் பிச்சையாய் இடு.
கையில் இட அருவருத்தால்
கீழே விசிறி எறி.
பொறுக்கிக் கொள்கிறேன்.
பிறவி பலனையும் எய்திக் கொள்கிறேன்.

❣

## சிவ சிவா

எல்லாமும் மாயையே
நீயும் நானும் விதிவிலக்கன்று
மாரினுள் கிடக்கும் ஆசை துறந்து
அன்பென்று என்னை அடைத்திருக்கும்
அறை கதவை அகற்றி
வையம் ஆளப் போகிறேன் என்றார்

பைத்தியக்காரா என்றேன்
இல்லை பித்தன் என்றார்
எல்லாமும் ஒன்றே என்றேன்
நான் பித்தன்
பித்தனென்றால் சிவபிரான் என்றார்

உன்னொருவனைச் சேர
யாவும் துறந்து தவமிருக்கும்
என்னை ஏற்பாயோ என்றேன்.
சாந்த ரூபினி
நேச காமினி
என் மீதி அம்சினி
சக்தி இருக்க
உன்னை எப்படி ஏற்க இயலும் என்றார்.

கொடும் நஞ்சை தொண்டையினுள் வைத்து
வையம் காப்போனே
ருத்திர தாண்டவமாடி
கொடூரங்களைக் கலைபவனே
சக்தியின் சங்கரனே
உன் சக்தியாய்
உன் மனைவியாய்
உன் மறு அம்சமாய்
அவளே இருக்கட்டும்
என்னுள் பெருக்கெடுத்தோடும் பேரன்பை
உன் சடாமுடியில் தாங்கி
சிறுகணங்கள் தங்கவைத்து
வையத்திற்குக் கடத்திவிடு
உன் மயிர் தீண்டிய நான்
சேருமிடமெல்லாம்
மோட்சமளிக்கும் புனித பொருளாகிய
கங்காதேவி போலாவது
உன்மீது நாளும் நான் வாழ
அனுமதி அன்பரே என்றேன்.
பிதற்றிய மனம் கொண்டாளே
சித்தம் தெளி
என உரைத்து சென்றுவிட்டார்.
சித்தமெல்லாம் சிவனே
தெளிய ஒன்றுமில்லை
தெளிவே அவர் தான்.
இது அவருக்குத் தான் புரியவில்லை
உங்களுக்கேனும் புரிகிறதா ?
சிவ சிவா.

❣

## பெருந் துயர்

திடுக்கென இதழ் அழுந்த
நான் இட்ட
ஈர முத்தத்தில்
கன்னம் மாலை நேர
கிரணமாய் சிவந்து
சிறு விழியெல்லாம்
பெருவெளி போல் விரிந்து
நாணம் ஏந்தி அவன் நிற்றலே
என் பெண்மையை சீண்டும்
பெருந் துயராகும்.

❣

## பிரபஞ்ச அழகி போட்டி

பிரபஞ்ச அழகி போட்டி எனச் சொல்லி
ஒவ்வொரு முறையும் உலகத்தில் உள்ள
அழகிக்கே பட்டம் சூட்டும்
ஓரவஞ்சனைகாரர்கள் இந்த மாந்தர்கள்.
போட்டிக்கு அழைப்பிதழே விடுக்காமல்
தன்னவர்களை வைத்து அரங்கேற்றம்
செய்து அழகு பார்ப்பவர்கள்.
ஒருவேளை மற்ற கோல்பெண்மணிகளேல்லாம்
ஒற்றைக் கண் ஆழகிகழாகவோ
முட்டைக் கண் குமரிகளாகவோ
நீண்ட நெடிய சிற்பங்களாகவோ
குட்டி கூன் கொண்ட பொம்மைகளாகவோ
ஆறடி கூந்தல் கொண்ட தேவதைகளாகவோ
மொட்டை தலை கொண்ட அழகுமோகினிகளாகவோ
இடை மிகச் சிறுத்த கன்னிகளாகவோ
கழுத்து நீண்ட பாவைகளாகவோ
மார் அற்ற எழிலினிகளாகவோ
இளஞ் சிவப்பு தேக கவர்ச்சிருபினிகளாகவோ
பாதமற்று பறந்து வரும் ஈர்ப்பு மங்கைகளாகவோ
இருப்பின்
இந்தப் பட்சபாதம் பார்க்கும் கூட்டம்
என்ன செய்யுமோ?!!!..

❣

## நீங்களும் செய்து பாருங்கள்

திறமை கூட ஒரு நாள் தோல்வியை தழுவும்
ஆனால்உழைப்பு ஒரு போதும்
தோல்வியை தொடாது
முயற்சி செய்
விடா முயற்சி செய்
விவேகத்துடன் முயற்சி செய்
விடை பெறும் வரை முயற்சி செய்
வினை முடியும் வரை முயற்சி செய்
வெற்றி காணும் வரை முயற்சி செய்
தோல்வியே தோற்றுப் போகும் வரை முயற்சி செய்
பிம்பமாய் உன் விழி முன் உள்ள ஆசையெல்லாம்
நிறைவேறும் வரை முயற்சி செய்
கண்ட கனவெல்லாம் நனவாகும் வரை முயற்சி செய்
வித்திட்ட விதையெல்லாம் வேர் விடும் வரை முயற்சி செய்
தோல்வி என்னும் மாய வலையில்
மூழ்கி விடாமல் முயற்சி செய்
கடைசி துளி செந்நீர் உள்ள வரை முயற்சி செய்
காசா பணமா முயற்சி தானே
சற்று செய்து பார்
இந்த வானம் என்ன வானம்
ஒரு சின்னஞ்சிறு அளவு கோல்
இந்தப் பிரபஞ்சமே  உன் வசப்படும்.

❣

# அடைந்து விடாமல் முக்தி அடையுங்கள்

மன்னன் மஞ்சத்தில் மீட்டித் தரும் சுகமும்
மல்லிகை மொட்டுக்கள்
கசங்கி சிவந்து கூட்டும் அழகும்
பூவின் இதழினுள் சிலுப்பி
தேங்கிய தேனை தேடி
எடுப்பதால் எட்டும் நிலையும்
தேகத் தூர் வாரப்படுவதால் வரும் களிப்பும்
இழு விசைத் தாங்காது
இதழ் வடிக்கும் செந்நீரின் சுவையும்
எல்லாம் எல்லை கடந்தும்
காட்டப்படும் காதலும்
இவைகளை ஊர் பழியின்றி அடைய
பெறும் ஒற்றைத் தாலியும்
அடிமை வாழ்வின் வாயில்களாகும்
அவைகளை நெருங்காதிருத்தலே
வையத்தில் முக்தி நிலை அடையப்
பெறும் பெரும் வழிவகைகளாகும்.

❣

## நேச ஆதாரம்

இடி முழங்கா மின்னல் கீற்றாய்
ஈர நெஞ்சில் விழுந்து
எங்கெங்கும் ஊடுருவிய பின்
தங்கித் தாலாட்டாமல்
தரையினுள் தலைவிட்டு
மொத்தமாய் கடந்தேறியதால்
என் நெஞ்செல்லாம் நீங்கா ரணம்.
அதுவே உன்மீதான நேசத்தின் ஆதாரம்.

❣

## துயர வெளி

துடித்து இறத்தல்
இருத்தலினும் சிறந்துவிட்டது
துயர வெளில் துணையின்றி நடந்து
பாதங்கள் தேய்ந்து
காலப்போக்கில்
கால்களே இல்லாமல்
முடமாய் ஆனேன்.

கடந்து வந்த பாதையெல்லாம்
ரத்த வாடை பரப்பி வந்தேன்
நானாய் உதிரம் சிந்தவில்லை
எல்லாம் முட்களின் மகிமையே.

பூக்கள் கிட்டாததினால்
முட்களில் உருண்டேன்.
ரணத்தில் துடித்தேன்.
நானாய் இரவில் இறந்தேன்
பகலில் மீண்டும் பிறந்தேன்
இம்முறையும் இறப்பதற்கே பிறந்தேன்

இறப்பின் பயம் அற்றவளாகி விட்டேன்.
விரக்தி நகை அணிந்த
அழகியாகி விட்டேன்.

காலனின் வரம் வேண்டி
வேள்வித் தீயில்
எண்ணெய்யுடன் என்னையும்
இட்டு எரித்தேன்
தேக எரிச்சல் தாங்கவில்லை
வரமளிக்க அவரும் வரவில்லை.

கருகிய ஊனோடு
உயிர் வாழ்கிறேன்
மனம் மட்டும்
கருகிக் காணாது போகாமல்
கல்லாய் இருந்து
வாழ் படகை கனத்து
மூழ்கடித்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.
அதை எண்ணி ஆனந்தக் களிப்பில்
திண்டாடிக் கொண்டிருக்கிறேன் நான்.

❣

## அனுபவம்

வயிறு எரிந்து
அதில் நானும் எரிந்து
சாம்பலாகி
ஆன்மாவில் பூசி
இறுகி
உன்னதங்களை உணர்ந்து
கரும்பலகையாகி
தேடலேதுமின்றி
தேடலுக்குரியதாகி
தேய்ந்து
தேய்பிறைகளை நிறையாக்கி
சிலரை சுமந்தும்
பலரால் கலைக்கப்பட்டும்
ஏமாற்றும் எதிர்பார்ப்புகளை
மதியில் ஏற்றாது
பரவாத ஒருங்கொளியாய்
பயன் நோக்கியே பயணிப்பேன்.

❣

## பழம் குதித்துவிட்டது

மரத்தின் நடு உச்சி கிளையில்
கனிந்த பழத்தைப் பறிக்கும்
எத்தனிப்பில் ஏறினேன்.
உச்சி சென்று பழத்தைத் தேடினேன்
எம் பழத்தைக் காணவில்லை.
தவிப்பில் தரையைப் பார்த்தேன்
எவளோ கையில் லாவகமாய்
விழுந்து கிடக்கிறது பழம்.
அவர்களுக்கு அருகில்
இறந்துகிடக்கிறேன் நான்.

❣

## முத்த கனா

நடமாடும் கவி அவனின்
குத குதப்பான
கத கதப்பளிக்கும்
சுட்டச் செந்தேனால்
இதழ் நனைத்து
நாவோடு நா பிணைத்து
வாயோடு வாய் இணைத்து
மூச்சோடு மல்லு இட்டு
என் இதழ் குவித்து
அவன் வாய் நிறைத்து
பசியைக் கூட்டுவதெல்லாம்
ஒலி அடித்துக் கலையும்
ஒளிமயமான கனாக்கள் மட்டுமே

❣

## யாருக்காவது கேட்கிறதா...?

ஏதோ இயற்ற எண்ணுகிறேன்.
எண்ணிக் கொண்டே இருக்கிறேன்.
எண்ணமெல்லாம் வெறுமையால் புனையப்படுகிறது.
புண்ணியப்பட்ட எழுத்துகள் எல்லாம்
என்னால் புண்பட்டுக் கொண்டிருக்கிறது.
விழியின் விளிம்புகளில் ஏதோ வழிகிறது.
அது வழிந்து கண் குழி தாண்டி
இதழ் வழி நுழைந்து
ஒரே கரிப்பு
அந்த உப்பு செறிந்த ஓர் துளி நீர்
எச்சிலுடன் கலந்து நிசப்தமாய்
தொண்டைக்குழியினுள் இறங்கி
கிழிந்து பிளந்த உணர்வற்ற கனந்த
இதயத்தை ஈரமாக்கி இதப்படுத்துகிறது.
இருந்தும் ஏனோ ஒற்றைப் புள்ளி
இட மறந்த அஃகேனமாய்
அர்த்தம் அற்றதாய் அலையுது என் மனது.
சலங்கை அற்ற கொலுசாய்
வாய் சத்தமற்ற அவல கீதம் பாடுகிறதே
யாருக்காவது கேட்கிறதா...?

❣

## எந்தன்பேரின்பம்

கிட்டா உயரம் குடிகொண்டருளும்
நா முகம் அற்ற கவி அயனே
கரத்தால் கவி பிரசவிக்கும்
பெருந் திராணி பெற்ற பிரபுவே
உம்மால் பிறப்பெடுக்க
அவை செய்த தவம் என்னவோ
இழையழகன் உம்மைக் காணாது
இளைக்கும் நான் செய்த பாவமென்னவோ
பாவி மனம் பட்டுதான் திருந்துமோ
திருந்தாது இருத்தலும்
தித்திக்கும் இன்பமோ
என் எழுத்தெல்லாம் உன்னை
கருவாய் சுமந்து
காதலாய் பிரசவிக்குதே
உன் திருவாயில் சில வார்த்தை துளிர்த்திட
அன்பு தூபம் இடும்
இந்தப் பேதை உன் செவ்விழியில் சிக்கவில்லையோ
சிக்குண்டு சிறப்பு எய்திடும் நாள் எந்நாளோ
அத்திருநாள் வராதிருந்தாலும்
உம் ரசிகையாய் காதல் செய்து
மாய்வதும் பேரின்பமே.

❣

## இசைக் கச்சேரி

ஆள் அற்ற நால் சுவர் அரங்கில்
நாழிகை நகர்வது அறியாது
இரவின் போதை போர்வையில்
இசைக் கச்சேரி நிகழ்த்துவோமா.
சுதியோடு நீ இசைக்க
சுகத்தோடு நான் பாடவா.
குறுகி நீண்ட குழல் நீ ஊத
தேன் பொழியும் மலராய் நான் மாறவா.
உன் ஆயுட் காலம் நீள
மூச்சுக் காற்றை சிறு மணித்துளிகள்
நிறுத்தி சுகம் காண்பிக்கவா.
வாலிபம் வழியச் சுக தாளம் வாசித்து
இன்புறலாமா.
காதல் தேடி
காதல் வளர்ப்போமா
என் கலியுக காதலா.

❣

# இளமைஅழுத்தது

ஊடலும் கூடலும் நிறைந்த காதல்
அந்தக் காதலை அங்கீகரிக்க
ஒரு கல்யாண கூத்து
ஆசை பட்டுப் பெற்றால் பரவாயில்லை
அவன் ஆசைக்காக பெற்றால் கூட தவறில்லை.
ஆனால் கொஞ்சமும் சொந்தமில்லா
இச்சமூகத்திற்கு பயந்து
பெற்று
அந்த மழலைக்கு உன் மீதுள்ள காதலை
பங்கிட்டு வளர்த்தால்
அந்தக் குழந்தையும் வளர்ந்த பின்
அவள்(அவன்) மீதுள்ள மோகத்தால்
விட்டுச் செல்லும் துயரம்.
அனுபவிக்காமலே அலுத்து விட்டேன்.
இனி அனுபவிக்க ஒன்றுமில்லை
என் இனிமையான தனிமையை தவிர.

❣

## பித்துற்ற மனம்

நீயற்ற நான் மரத்தடி நிழலில்
உணர்வின்றி இளைப்பாறும்
இலை தான்.

சிறுகச் சிறுக சருகாய் சாகும்
என் உயிருக்கு எம் கரங்களே
இரங்கல் பா வடித்துக் கொண்டிருக்கிறது.

'வருந்தாதே' என நின் திருவிதழ்
திறந்து உதிர்த்திடும் வார்த்தையில் தான்
அடக்கி வைத்துள்ள கண்ணின்
கழிவு நீர் எல்லாம் கன்னத்தைத்
தழுவிச் செல்கிறது.
அதுவாக இதுவாக எதுவாகவோ
எப்படியோ ஏதோ ஒன்றாக
என் வாழ்வில் இருந்துவிடேன்.

அகத்தினுள் இடம் இல்லையெனினும்
உம் வீட்டு நாயாக நினைத்து
அக வாசலில் ஆவது கட்டுண்டு வையேன்.

நினைவாய் மட்டும் நிலைத்து விடாதே
நினைவுகள் எல்லாம் எனக்குப் பற்றாதே.
நித்தமும் நீ நிலையாய் சிலையாய்
காட்சியாய் கடவுளாய் காதலனாய் நிலைத்துவிடேன்.

நிலையற்று போகும் இருப்பாயினும்
உன் இல்லாமையை உணரா
பித்து நிலையோ அல்ல
இறப்பு நிலையோ எட்டும் வரையேனும்
உம் இருப்பை தக்க வைத்து செல்லேன்.

எம் காதல் கலைதல் வேண்டி
மௌன தூது அனுப்பாதே அழகே.
அவை தூதல்ல என்றாவது
என்னுயிர் கொல்லும் சூது.
பிரிவு எண்ணி அஞ்சினாலும்
உள்ளமை வேண்டிக் கெஞ்சினாலும்
தீரத் தீரக் கொஞ்சினாலும்
கடுங்கோபத்தில் மிஞ்சினாலும்
ஏதும் எனக்கென மிஞ்சப் போவதில்லை
என அறிந்து என்று தெளிவாயோ
என் பித்துற்ற மனமே.

❣

## தனிமைதரும் பயம்

அந்த மழலை மலர்கள் நிறைந்த
பூங்காவின் ஓர் ஆளற்ற மூலையில்
நான் தள்ளிவிட்ட விசை தாங்காது
முன்னும் பின்னும் தள்ளாடிக்கொண்டு
ஊஞ்சல் அலறிய "கீச் கீஇச்" சத்தம்...
அய்யோ!!
ஏதோ தன்னந்தனியாய்
மயானத்தின் மத்தியில்
மழுங்கிய மூளையை அடைத்து
அருளும் மண்டையோட்டுடன்
காத்துக் கிடக்கும் எமக்கு
காலன் கரிசனத்தோடு அறிவித்த
என் காலாவதி நாளுக்கான
அவல ஓலமாய் ஒலிக்கிறது.

❣

## அறைகுறை காவியம்

எம் பொங்கும் அன்பின் பால்
இதயத்தினுள் சிந்தி
செந்தூர அமுதாகி
யாக்கையினுள் எங்கும் ஓடி
அகிலம் எங்கிலும் அரிதாய்
அடையப் பெறும் அருவ நேசமாய்
உள்ளூர செழித்திருக்கும் உம் மீது
கொண்ட காதலை
என்னைக் காலன் அழைக்கும்
காலம் வந்தாலும்
காட்டித் தீர்க்க இயலுமோ.
என் கண்ணின் ஒளி உம்மை
தீண்டாது துளிர்த்ததல்லவா எம் காதல்.
உம் பேரழகின் பலனாய்
விளைந்தவை அல்ல இது.
உம் பேரன்பின் பலனாய்
விளைந்த விளைச்சலள் இது
உன் கவியின் கருவாய்
என்றாவது உயிர்த்து
மனம் நிறைந்து மாய்வதே சுகம்.

நெல்லுடன் விளைந்த உமியாய்
என்னை விசிறி எறிந்தாலும்
என் பிறவி விதியே
அவையென யான் அறிவேன்.
அன்பு செலுத்த அஞ்சாதே
அன்பால் என்னுடன் அடைத்துவிடமாட்டேன்.
காலமெல்லாம் உயிர் போல
பின் தொடர்ந்தாலும்.
உடல் போல என் இருத்தலை
பிறர்க்கு உணர்த்தி விட மாட்டேன்.
நம் பெயரற்ற பந்தத்தில்
காதலால் காதலை
மட்டும் இயற்றுகிறேன்
முடிவுரை அறியாத
அறியவும் விரும்பாத
ஓர் அறைகுறை காவியத்தை.

❣

## ஒப்புதல் வேண்டி

இருக்குமென எண்ணியவை
இல்லாது போன பின்
இழப்பதற்கும் ஒன்றுமிருக்காது
இருப்பதற்கும் காரணமிருக்காது.

என்னென்னவோ செய்தேனே
எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டாய்.
கௌரவம் என்னைவிட்டு
கூண்டோடு குடிபெயர்ந்தேவிட்டது.
திமிறிய திமிரெல்லாம்
தடமறியாது தலைமறைவானது.
கடலை மிட்டாயாய்
என் கரத்தில் கிடந்த நீ
காணாமல் போய்
இன்று என்மீது
பிசுபிசுப்பாய் எஞ்சியிருப்பது
உன் நினைவுகள் மட்டுமே.

எனக்கும் உயிர் உண்டு
அதற்கும் வலிக்கும்
அதைப் பொறுக்காது அழுகும்
விம்மி மூச்சு இழைக்க கதறும்
எனத் தயை கூர்ந்து
புரிந்துக் கொள்ளேன்.

காகிதத்தில் காதல் செய்து
காத்துக்கிடக்கும் எனக்கு
கண்ணசைவில் ஓர்
ஒப்புதல் தாயேன்
என் வாலிப கவியே...!

❣

## உனக்கு மட்டுமான வேசி

நான் வேசியாகி விடுகிறேன்
அப்போதாவது நீ வா
நீ மட்டும் வா
எனக்காக சில நாட்கள் மட்டும்
பகலிலும் வா
பணமேதும் வேண்டாம்
ஊர் அறியாமல் காதோரம்
காதலி எனச் சொல்லி
கண் சுருக்கி சிரித்துவிட்டு போ
அது போதும்
அதுவே போதும்.

❣

## பயணப் போராளி

என்னைத் தேடிய பயணத்தில்
திரும்பிய இடமெல்லாம்
உன் மீது மோதியே நின்றுவிட்டேன்.
மோதிக் கொண்டே இருக்கிறேனே
உனக்கு வலிக்கவில்லையா
இல்லை வலித்தும் சிரிக்கும்
கலை அறிந்தவனா
உன் சிரித்தலும் சீறுதலும்
எல்லாமும்
என் பயணத்தின் சில மேடு பள்ளங்கள்
அவ்வளவு தான்.
வழி வேண்டி மண்டியிடவில்லை
நீயே என் வழியாகிப் போகவே போராடுகிறேன்.
காதல் போரில் பங்கேற்கும்
வழி அறியாமல்
அல்லாடிக் கொண்டிருக்கும்
சாமானிய போராளியே நான்.
பயணப் போராளி எனவும் சொல்லலாம்.

❣

## வாய்க்கரிசி போடுங்கள்

யாரெல்லாம் என் சாவிற்கு வருவீர்கள்.
பணமே பார்வதி என்றான நிலையில்
வேலையை விட்டுவிட்டு
கொஞ்சிக்கொண்டிருக்கும் காதல் கிளியை
ஓரம் போகச் சொல்லிவிட்டு
பயணத்திற்குப் பணத்தை வாரி இறைத்துவிட்டோ
அல்ல கால் நடையாகவோ
நிச்சயம் வருவீர்களா..
வர இயலுமா..

பயப்படாதீர்கள் இன்றே வரச் சொல்லி
இம்சித்துவிட மாட்டேன்.
என்றாவது உங்களைக் கூப்பிடுவேன்
அடக்கம் செய்யும் முன் வந்து விடுங்கள்.
அன்று நிகழ்ந்த என் மனச் சாவிற்குத் தான்
நீங்கள் யாருமே வரவில்லை.

நானே எம் பிணத்தை
அழுத அமுத நீரில் கழுவி
அடக்கம் செய்ய வழி அறியாமல்
பக்கத்தில் உட்கார்ந்து
அழுகுவதைப் பார்த்து ரசித்தேன்.
அது மக்கி மண்ணோடு மண்ணாகி
உரமாகி விட்டது.

யாரேனும் மீண்டும் ஒருமுறை
பாச விதையைத் தூவிச் சொல்லுங்கள்
மீண்டும் மனம் முளைக்கட்டும்
இம்முறையாவது எம் மனச் சாவிற்கு முன்
என்னுடல் சாவு நிகழட்டும்
என வாழ்த்தி
வாய்க்கரிசி போட்டுச் செல்லுங்கள்.

❣

## கனா காதலன்

மகுடம் சூடா அரசனே!
எனக்கு மாலை சூட வந்த கணவனே!

ரதம் ஏரா மன்னனே!
என் மதிப்பை ஏற்ற வந்த மன்னவனே!

நாடாளா வேந்தனே!
என்னை ஆள வந்த நாயகனே!

யாரையும் அடிமைப் படுத்தாத கோனே!
என்னை உன் அன்பால் அடிமைப் படுத்திய அழகனே!

தர்மம் மீறாத தலைவனே!
இன்று என் மனதைக் களவாடி
கள்வனாய் நிற்கும்
அவலநிலை உனக்கு ஏனோ?

என் கனவில் மட்டும் காட்சி தரும் காதலனே
என்று நனவில் வந்து
காட்சிதருவாயோ?!

❣

## தகுதியற்ற காதலி

என் அன்பிற்குத் தகுதியற்றவள் எனச் சொல்.
என் அன்பு கனக்கிறது என உரை.
பகலின் இருளான நிழல் போல்
தொல்லையாய் பின் தொடராதே
என விரட்டி விடு.
போலி நேசம் காட்டாதே என ஏசு.
பொய்யின் பொருளான உன்னோடு
வாழ்வியலின் பொருள் தேட
இயலாதெனக் கூறு.
கருப்பி
கண்ணாடிக்காரி
அன்பற்றவள்
அழகற்றவள்
என எதையாவது சொல்.
நான் காட்டுவது காதலே இல்லை
காமம் எனப் பழி.

என் கூடா காதலும்
கூடாமல் போகட்டும்.
என் நேசம் எல்லாம்
நெஞ்சோடு கிடக்கட்டும்.
என் ஆசையெல்லாம் அரங்கேறாமல்
அனாதையாய் திரியட்டும்.
நிம்மதியற்ற நிலையாவது
நிலையென ஆகட்டும்.
என் மனதாவது
நீரில் மூழ்கிக் குலைந்து போன
சந்தனம் போல் சாந்தமாகட்டும்.

❣

## கரையும் கடலும்

என்னை மிதித்து வடு விட்டுச் செல்பவர் மத்தியில்
சலிக்காத அவன் தழுவல்களே களிம்பாய்
வடு நீக்கிச் செல்கிறது.

❣

## நாகரீகம்

அகிலத்தோடு தொடர்பு இலக இலக
இறுகிக் கொண்டிருக்கிறது
மாந்தரின் மக்கிக் கொண்டிருக்கும் மனது.

கை குவித்துப் புன்னகை பூச்சூடி
வரவேற்றல் ஆகாதாம்.
காண்போரை எல்லாம் கச்சிதமாய்
கட்டி அனைத்து முடிந்தால்
கன்னத்தில் எச்சில் படா முத்திட்டு
வரவேர்த்தலே மதிக்கதக்கவை யாம்.

ஆட்டாங்கல்லில் அரைக்கப் பட்டது தான்
அது செய்த பாவமோ.
ஏற்கெனவே வெந்த தோசை என பாராமல்
மேன்மேலும் கத்தியால் கீறிக் கிழித்து
அறுவை சிகிச்சை செய்து
புசித்தலே சிறப்பாம்.
கரம் கொண்டு பிய்த்துத் தின்றால்
அது செய்யக் கூடா குற்றமாம்.

உணர்வதை வெளிப்படுத்துதல் தவறாம்.
உண்டதை கூட ஊடகத்தில் பதிவிடுவது
உன்னதமாம்.

வேண்டா கணவனைக் காலமெல்லாம்
கட்டிக் கொண்டு கதறினால் கண்ணியமானவளாம்.
காதலனைக் கட்டிக் கொள்ளாமல் காலமெல்லாம்
காதலித்தே மாய்ந்தாலும் மானங்கெட்டவளாம்.

நாகரிகம் கலாச்சாரம் என்ற பெயரில்
மனம் ஒப்பா செயல்களைச் செய்தால்
மதிப்பு மட்டுமே மிஞ்சும்.
சுய மானம் மரிந்தே விடும்.
வையத்தின் கட்டளைக்கு இணங்க நடக்காவிடின்
நால்வர் இகழ்வர்
பார்க்காத பலர் கூட இளிப்பர்.
இளிக்கட்டும் நன்றாக இளிக்கட்டும்.
இளித்து இளித்து வாய் கிழிந்து போகட்டும்.

நாகரிகம் நா கக்கும் சொல் போன்றே
என்றுமே ஒன்று போல் இருக்காது.
காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறும்
மாறிக்கொண்டே தான் இருக்கும்.
நாம் பொன் தின்றாலும்
இறுதியில் நம்மை மண் தான் தின்னும்
என அறிந்து
ஊரின் பழிச்சொல்லை
எண்ணித் திரியாமல்
இனிமையாய் வாழ்ந்து திரிதலே
வாழ்வதற்குப் பொருள் கூட்டும் செயலாகும்.

❣

## நானும் உத்தமியே

என் மகன் வயதில் சிலரும்
என் தகப்பன் வயதில் சிலரும்
சமயத்தில் என் தாத்தனின் வயதில் சிலரும்
என நித்தமும் ஒருவன்.

ஒரு சில ஆயிரங்களுக்கா
உயிர் ஒளிந்திருக்கும் உடலை
வாடகைக்கு விடுகிறேன்.

சிலர் அனுபவிக்கின்றனர்
சிலர் ஆராய்கின்றனர்
சிலர் அணு அணுவாய் அங்கங்களைச் சிதைக்கின்றனர்.

ஓயாத வெய்யோன் மறைவில்
அகல் விளக்கோடு அக விளக்கின்
ஒளியையும் அணைத்தே
பசி தீயை அணைக்கிறேன்.

சிறுக சிறுக தரகருக்குத்
தாரைவார்த்தது போகச் சேமித்த காசில்
அரை குறையாய் ஆடவரைக் கவர
உள்ளாடை தெரிய உடுத்தும்
அந்த ஓரே ஒரு அழகிய புடவையையும்
கெஞ்சுதலுக்குச் செவி சாய்க்காது
கிழித்து எறிதலில் சுகம் காண்கிறார்கள்
கல்நெஞ்சக்காரர்கள்.

பூவிதழ்
கனிமுலை
என பாராமல் கசக்கிக் கடித்து
ரத்தத்தை ருசித்து
சீல் ஒழுக வைத்துவிடுவார்கள்.

உடல் எங்கும் ரத்தம் ஒழுகும் ரணமும்
அங்கமெல்லாம் ஆள் கொல்லும் வலியும்
ஆங்காங்கே பல் தடம் பதிந்த தழும்புகளும்
தூக்கத்தைக் கூட தூக்கி எறியச் செய்கின்றது.
உடல் விற்றாலும்
அவளும்  உயிர் சுமக்கும்
மங்கையென மறந்துவிடுகின்றனர்.
உணர்ச்சிகள் எல்லாம் உறுப்பு விட்டும்
உள்ளம் விட்டும் மொத்தமாய்
அழிந்தே விட்டது.

அம்மணமாய் தெருவில் வலம் வந்தால் கூட
கூச்சம் வராது.
சிணுங்கச் சொல்லிச் சிலுப்பினாலும்
தோல் தேய்ந்து ரத்தம் வடியுமே ஒழிய
இன்பத் தேன் வடியாது.

நெஞ்சின் மேல் நூறு ஆடவர்களைச்
சுமக்கும் வேசி ஆயினும்
நெஞ்சினுள் நிறைந்திருப்பதும்
நிலைத்திருப்பதும் ஒருவனே.
அன்று கழுத்தில் மூன்று முடிச்சிட்டு
காலத்தின் விதியால் வாதத்தால்
இன்று முடங்கிக் கிடக்கும்
என்னவனுக்கு
நான் என்றுமே உத்தமியே.

❣

## சாக்கடையின் புனித நீர்

குளியல் பொழுதில் அவன்
மேனியை உரசி உறவாடும்
ஒற்றை நீர்த் துளி நான்.

ஒரு நொடியில் புனிதமடைந்து
மறு நொடியில் சாக்கடைக்கு
செல்லும் புனித நீர் நான்.

தப்பித் தவறி அவனின்
உலர்ந்த இதழில் படும்
முதல் துளி நீராய் நான் இருந்திருந்தால்
அவன் அறியாது அவனுள் சென்று
அவனுள் கலந்திருக்கக் கூடும்.
ஆனால் நானோ அவனால்
துடைத்தெறியப் படும்
கடைசி துளி நீரானேன்.

❣

## சிறந்த மீதி

எந்தன் சிறந்த மீதியே
நாட்கள் பல நடந்தும்
புதுப்பெண் நாணங்கள்
என்னை இன்னும் நழுவவில்லை.

என் விழி சூடும்
இருட்டின் பெரும் பகுதிகளுக்கும்
உன் பாதையே.
தவழ்ந்தாலும்
தடுக்கினாலும்
சேரும் மூலமையம் நீயொன்றே...

பனிக்குடமுடைந்தும் வாயில் திறக்காது
தலை முட்டி தட்டும் பிள்ளையாய்
என்னை ஆக்கிய
உன்னைத் தட்டிக் கொண்டே இருக்கிறேனே
உன்னொழுத்தாய் எண்ணி
கவிதைபோல் என்னையும்
பிரசவித்து விடேன்.

உடல் உற்று உயிரற்று
உன்னால் ஆன
நினைவு வாசலில்
உருண்டு கொண்டிருக்கிறேன்.
உற்று நோக்கியேனும்
உரியவளாய் உரிமையளித்து விடேன்.

ஒளியற்று தகிக்கும் வெய்யோனாய்
மீதியற்று ஆதி தொலைத்து
பரதேசியாய் பாதியாய்
மீதியை மீட்டெடுக்க எண்ணி
மீன்முள்ளான் புறக்கணிப்பில்
குத்துப்பட்டும்
வெகுளித்தன கொஞ்சல்களில்
குணப்பட்டும்
உடல் காத்துக் கொண்டிருக்கிறேன்
உயிர் தருவாய் என்றெண்ணியே...!

❣

# உனக்கு நிகர் ஏதுமில்லை

உனக்குப் பதில் கல்லைக் காதலித்திருந்தால்
கல்லும் காதலில் கரைந்திருக்கக் கூடும்

உனக்குப் பதில் மண்ணை காதலித்திருந்தால்
மண்ணும் காதலில் பொன்னாகியிருக்கக் கூடும்

உனக்குப் பதில் விண்ணைக் காதலித்திருந்தால்
விண்ணும் காதலில் ஈர்ப்புவிசை பெற்றிருக்கக் கூடும்

உனக்குப் பதில் கால்வாயைக் காதலித்திருந்தால்
கால்வாயும் காதலில் கங்கையாகியிருக்கக் கூடும்

உனக்குப் பதில் உரத்துப் புழுவைக் காதலித்திருந்தால்
புழுவும் காதலில் பட்டாம்பூச்சியாகியிருக்கக் கூடும்

உனக்குப் பதில் உமியைக் காதலித்திருந்தால்
உமியும் நெல்லாகியிருக்கக் கூடும்.
எல்லாவற்றிற்கும் பதிலாய் உன்னைக்
காதலித்ததால் தான்
உடலாய் இருந்த நானும்
உயிராகி நிற்கிறேன்.
உயிரை ஏற்காவிடில்
அவ்வுயிரும் போகக் கூடும்.

## எதிர்பார்ப்பு

எதிர்பார்ப்புகள் வெறும்
உணர்வுகளாய் இருந்திருக்கலாம்.
அதை விடுத்து அவையோ
உதிரத்தால் முழுகப்பட்ட
இதய தசை நார்களில் உயிரைப் பூசி
உடையும் கலசமாய் உருவெடுத்து நிற்க
அதைப் பெறுபவர்கள்
அதை நிரப்பாவிடினும்
நசுக்கிப் பிய்த்து எறியாதிருத்தல்
சாலச் சிறந்த உயிர் காக்கும் செயலாகும்.

❣

## கால விதி

தீதறியா தேன்பிழம்பாய் செவியெங்கும்
வழிந்தோடிய குரல் கேளாது
தீகக்கும் உடும்பின் மீளா பிடியில்
அகப்பட்டுக் கருகிக் கொல்லப்பட்டுக் கொண்டிருப்போராய்
கணங்களைக் கடத்தும் எம் கால நிற்றல் நிகழாதோ
இல்லையேல் எம் பற்றெல்லாம் மெய்ப்பித்து
மொய்க்கும் வண்டென
வாடும் வரை ரீங்காரமிட்டு
உன் திருமேனியை கிரிவலமிடுதல் தான் நிகழாதோ.
தீர்த்தமாயினும் தீட்டுநீராயினும் வறண்டு வற்றி
வளிமண்டலமே சென்றடையும்.
நிரம்பா வாளி வளியாலேனும் நிறைந்து வழிந்தே தீரும்.
அதுபோல் எது எப்படி ஆயினும்
கால விதியிற்குக் கீழ்
நீயும் நானும் சங்கமித்தல் சத்தியமே.
அது நம் நகர நரகதில்லா அல்ல
சொப்பன சொர்கத்திலா என்பதெல்லாம்
உன் சித்தமே.

❣

## மாற்றத்தின் சுவை

இளைத்தவனை இழுத்துச் சுவைத்து
வாயெல்லாம் ஒடுக்கு விழுந்துவிட்டது.
உருண்டு திரண்ட உன்னை
ஓர் இடுக்கிடையில் பற்றி
அடியினில் மெல்ல தணல் மூட்டி
மேல் நுனியினில்
பதமாய் என்னிதழ் வைத்து
இழுத்து உறிஞ்சு
நெஞ்சம் விரிந்து
அதில் திளைத்து
வெளியேற்றுவேன்
வெள்ளை புகைகளை.

(பீடியில் இருந்து சிகரெட்டுக்கு மாறியதை  பற்றியே எழுதியுள்ளேன்.)

❣

## விலைமகன்

காலங் கெட்டுப் போச்சு
இல்ல இல்ல நம்ம தான்
ஊரு குருவி ஒயர
பறக்காதுனு சொல்லி
பருந்த புடிச்சு சோறு ஊட்டி
வளர்த்த கதையா
தட்டிக் கேக்குற எல்லாதையும்
நம்மத் தகுதிக்கு தலையாட்டி புட்டு
போய்டோனும் சொல்லி சொல்லியே
கெடுத்துப் புட்டோம்
ஒரு நாயி குடும்பத்த கூட்டிக்கிட்டு
வூட்டுக்கே வந்து
வியாபாரம் செய்றான்
நல்ல கலையானவன் தா.
பூன காலுல கட்டுன கொலுசு
சத்தம் மாதிரி
தாளம் இல்லாம இருந்தாலும்
கேட்கறதுக்கு நல்லா
வெல்லக் கரசல் மாதிரி
தித்திப்பாத பேசுறான்.
வாங்கறதுக்கு கொஞ்சம் போல
தகுதியானவன் தான்.

ஆனா என்ன
அவன் விலை தான் கொஞ்ச கூட.
லட்ச ரூபாவாமே.
நமக்கு இந்த விலைமகன் சகவாசம் லா ஆகாது சாமி,
நீ வேற வூடு போய் பாருனு சொன்னேன்.
சட்டுனு கொவிசுக்கிட்டு வூட்ட வுட்டு
வெரசா கிளம்பிட்டான்.
தேவடியான் இவுனுக்கு என்ன இத்தன ரோசம் னு கேட்ட,
"உன்ன பார்க்க வந்த மாப்பிள"னு சொல்லுறாங்க.
நகை நட்டுனு கொடுத்தாதா
கூட வந்து படுப்பேனு சொல்லாம சொல்லற
இவனுங்க பேர் எல்லாம் 'மாப்பிள்ளை' யாம்
இது என்ன சாமி கூத்தா இருக்கு.
நான் கூட வீடு வீடா போய் விபச்சாரம்
ச்சீ... வியாபாரம் பண்ணுறாங்களோ னு நினைச்சிட்டேன்.

❣

## உயிர்க் கொல்லி...

அவன் மீது பெருங்காதல் தீ கொண்டு
அவனுள் காதல் அனல் மூட்டுகிறேன்.
அவன் மீதான காதல் நெஞ்சைக் கடந்து
காற்றோடு கலந்து என் மூச்சை முட்டுகிறது.
முட்டி வெளியேற இயலாமல் உயிருள்
ஆசை நஞ்சு செறிவடைந்து சித்திரவதை செய்கிறது.
அணு அணுவாய் ஆன்மா துன்புறுகிறது.
அவன் நினைவு தூய நெஞ்சில்
ஏக்க தூபமிட்டு தூக்கங் கொல்கிறது.
சொல்ல வழியின்றி வாலிபம் வாடுகிறது.
உயிர் சிதைகிறது.
உள்ளம் உறைகிறது.
உடல் தளர்கிறது.
அன்பு வலிக்கிறது.
காதல் கொடூரமான
உயிர் வதைக்கும்
உயிர்க் கொல்லியாகவே
திகழ்கிறது.

❣

# நீ

நித்தமும் என்னால் நினைக்கப் படுபவன் நீ
நீள் வரிசையில் நின்றாவது தினந்தினம்
தரிசிக்க பட வேண்டியவன் நீ
அள்ளித் தரும் அன்பை
குறையாது குறை காணாது பெற்றுக் கொள்ளும் நேசகன் நீ
என் படைப்பின் காவியத் தலைவன் நீ
என் கவியின் பாடு பொருள் நீ
நான் கண்டு ரசிக்கும் என் காட்சி பிழை நீ
நான் கேட்ட இனிய கான ஒலி நீ
என்னையும் சீராட்டும் சிங்கார மகராசன் நீ
நான் கண்டிறாத முப்பரிமாண அழகு ஓவியம் நீ
இந்த வஞ்சியுடன் வாதம் புரிந்து வாகை சூடுபவன் நீ
வார்த்தை ஜாலத்தில் கற்றுத் தேர்ந்த அக கள்ளன் நீ
கவி பாடியே மையல் உறச் செய்யும் இளங்காளை நீ
இன் பண்பால் இனிப்பாய்
என் அக கடலில் கரையும்
என் கருத்த பஞ்சு மிட்டாய் நீ
என்னை இயற்ற வந்த எழுத்தாளன் நீ
சாவியற்ற புதிரான புதையல் நீ
பறிக்க இயலா புதை மேட்டுப் பூ நீ
நான் பருக நினைக்கும் கானல் நீர் நீ
நான் தொட்டு விளையாட எண்ணும் தொடுவானம் நீ
கொஞ்சம் மோசமும் நீ
நிறைந்த நேசமும் நீ
என்றேன்றும் என் நேசத்திற்குரியவனும் நீயே

❣

## அழியா நினைவுகள்

தீயிட்டு எரித்தாலும் அழியாது
சாம்பலாய் மாறி
நான்கு அறை இதயத்தையும்
சாம்பல் மேடாக்கி
உயிர் அற்று உடல் சுமக்கும் என்னை
நொடிக்கு ஒரு முறை அதில் அடக்கம் செய்கிறது
அவன் விட்டுச் சென்ற நினைவுகள்.

❣

## சுக இரை தேடும் நாய்கள்

ஏன் ஐயா ஏன்
உங்கள் பார்வை ஒளியில்
உடை தரித்த நாங்களும் அம்மணம் ஆகிப் போகிறோம்
உடல் மறைக்க ஆடை
அது போதாது என மாராப்பு

அணிந்து வந்தாலும்
மனக் கிடங்கில் உடை கலைத்து உடல் காண்கிறீர்கள்
அப்படியே சற்று தேகத்தின் துகில் உரித்துக் காணுங்கள்
நாங்களும் ரத்தமும் சதையுமான  உயிர் எனப் புரியும்
முன்னும் பின்னும்
கொழுப்பும் தசையும் குருதியுமாய் உருபெற்று
காலிடையில் கடவுளின் கஞ்சத்தனத்தால்
ஒரு துளையும் பெற்றே
உங்களில் இருந்து வேறுபடும்
மற்றொரு மனித பிறவியே.
ஓடினால் எதிர் வருவோர் பார்வையெல்லாம்
உடையினுள் குலுங்கும் சதையின் மீது தான்.
நடந்தால் பின் வருவோரின் எண்ணமெல்லாம்
பின் தெரியும் தசையின் அளவின் மீது தான்..
குனிந்தால் பார்ப்பவர் தேடல் எல்லாம்
எங்கள் கழுத்திற்கு கீழ் தான்.
நடையிற்கு ஒரு பாடல்
பார்வைக்கு ஒரு நாள் அழைப்பிதழ்.
சிரிப்புக்குத் தாசி  என்னும் பட்டம்.

ஓரம் நடப்பவளையும் இடித்து விட்டுச் செல்வது
பாராட்டும் சாக்கில் கையைப் பிசைந்து எடுப்பது
தடுக்கியதைப் போல் மேல் வந்து விழுவது
இன்னும் ஏராளம்
உடை சிறுத்து
கொஞ்சம் உடல் காட்டிச் சென்றால்
உடன் வருவாள் என்பார் மத்தியில்
இவ்வுரை என்ன மாற்றம் செய்து விடப் போகிறது.
தவறாய் நடந்தால்  இடம் பாராது
அவ்விடத்திலே பார்வை பட்ட மங்கைகள்
எல்லாம் செறுப்பு பிய்ந்திட அடித்தால் ஒழிய
இந்த ஆண் வர்க்கத்தையே கேவலப் படுத்தும்
ஒரு சில சுக இரை தேடும் நாய்களுக்கெல்லாம்
புத்தி வராது.

❣

# அவள் கணவனே என் காதலன்

மாற்றார் மங்கையின்
மட்டில்லா மாட்சியுடைய மணவாளனால்
உள்ளத்தினுள் காதல் மலர்ந்து
துரிதமாய் வளர்ந்து
வீரியமாய் நெஞ்சில் நிறைந்து
அழியா நெகிழியாய் நிலைத்து
அவன் நினைவென்னும்
சுவாசக் காற்றிலே
என்னுயிர் மிதக்கிறது.

இடையவிடாது பரந்து
வான்வெளியெங்கும் அலைந்து திரிந்து
மண்ணில் வீழ்ந்து
உணர்ச்சி தெறித்து
உயிர் உருகுகிறது.
அவளென்னும் குட்டி குன்று
அவனென்னும் மன்மத மலையின்
பாதையை மறைக்கிறது.

குன்றோடு சேர்த்து
மன்றாடும் என்னையும்
அவன் தழுவிச் செல்ல
வாய்ப்பு தேடி அலைகிறது.

ஓர் சாண் இதயக் கூட்டில்
ஐந்தரையடி அழகன் அமர்ந்திருக்கும்
அதியசக் கூற்று யான் அறியேன்.

இதயத்தினுள் இருப்பவனை
எஞ்சிறு வாழ் வட்டத்தில்
வந்து போகச் சொல்லித்
திண்டாடித் தவித்து
கண்ணீரைச் சிந்தினாலும்
கள்ளத்தனமென ஏசப்படுகிறது.
போகூழ் குவிந்து
போக்கற்று பிணி பிடித்து
நாடி நரம்பறுந்து
சீழ் பிடித்து சாவேனென
பார்ப்போரெல்லாம்
பழித்துத் தீர்க்கிறார்கள்.

இன்னும் கொஞ்சம் சேர்த்துப் பழியுங்கள்
என்னை மட்டும் பழியுங்கள்
என் காதலை வேண்டாம்.

❣

## காதல் பிதற்றல்

அனுதினமும் உன்னை
அள்ளி அணைப்பேன்
தொடுதிரைக்கும் போட்டியாய்
நான் வருவேன்.

உன் மூக்கோடு முட்டி
முத்தமிடுவேன்.

வாய்ச் சண்டையையெல்லாம்
இதழ் சண்டையாக்குவேன்.

இலையுதிர் காலக் காற்றாய்
உன்னை நீங்காதிருப்பேன்.
கோடைக்கால குளிராய் இதமளிப்பேன்.
பனிக்கால வெயிலாய்
கட்டி அணைப்பேன்.
மோகம் முப்பது நாளில்லை
மூச்சு நிற்கும் வரையென நிரூபிப்பேன்.
போ என்று விரட்டினாலும்
போகாது தொல்லைச் செய்வேன்.
வா என்றாலும் வாராது அடம் பிடிப்பேன்.

முந்தானை யோடு முடிந்து கொள்வேன்.
உப்பு மூட்டைத் தூக்க முற்படுவேன்.
மூச்சு முட்டக் காதல் செய்வேன்.
அன்பால் பித்துறச் செய்வேன்.

பொறுத்து
மன்னித்து
என்னை ஏற்றுக்கொள்
மாணிக்கமாய் உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்.

❣

## பருக்களின் சமிக்கை

அவன் முகத்தில்
முளைத்த பருக்கள் எல்லாம்
என் முத்தம் பெற சமிக்கை காட்டும்
பருவ குறியீடுகள் ஆகும்.

❣

## காதல் புதுப்பிப்பு

கவியே!!!
என்னை ஒளிர்வூட்டும் ஒளியே.
என்னை ஆட்கொண்டிருக்கும் வலியே.
பிரிவின் துயர் எண்ணியே
பிதற்றுகிறேன் உயிரே.

ஆதி அந்தம் மட்டுமல்ல நடுவும் நீதான்.
மறைய விரும்பா வடுவும் நீதான்.
நீதான் என்பதைக் காட்டிலும்
நீ மட்டும் தான் என்றாலே தகும்.
எழுதி எழுதி காதல் தீர்க்க எண்ணினேன்.
மாறாகக் காதல் மெட்டுக் கட்டி
மொட்டுகள் இட்டுக் கொண்டிருக்கிறது.

தனிமையில் வாடும் குட்டையென
இருக்கும் என் மீதும் பாசனமாய் படர்ந்தாயே
பருவ நெஞ்சில் பக்குவமாய் காதல் தெளித்தாயே.
தெளிந்த அன்பைத் தெளிவாய் உணர்த்தினாயே.

காதல் என்னைக் கடத்தியபின்
கட்டுப்படுத்த நீ
கட்டளைகள் இட்டால் மட்டும் எடுபடுமோ.
வீணாய் ஏமாறாமல்
என்னையும் ஏமாற்றாமல்
என்னுள் உன்னாலும்
உன்னுள் என்னாலும்
மலர்ந்த அலாதி அன்பைப் புணர்ந்து
காதல் ஈன்று நித்தமும்
புதுப் புது கவி பாடி
காதலைப் புதுப்பிப்போம் வா.

❣

## என்ன வேண்டும்?

என்ன செய்தல் வேண்டுமடா
நீ காதல் செய்திட.
ஏதொறு வழியும் அறியாதிருக்கிறேன்.

அவர் சொன்னார் இவர் சொன்னார்
ஊர் பழிக்கும் உயிர் வலிக்கும்
எனச் சொல்லி உம்மை நீங்கிச் செல்ல
வந்த நீராவி நான் இல்லை.
தாங்கி பிடித்துத் தாலாட்ட
வந்த தாரம் நான்.
எதைச் செய்து இதை மெய்பிப்பேன்.

என் பொங்கும் இளமையையும்
உன்னைத் தொழுதே இழக்கட்டுமா.

நீ தான் என் தொலைக்கப்பட்ட
மீதி உயிரென ஊரெல்லாம்
உரக்கச் சொல்லட்டுமா.

என் இளம் தேகம் நோக
உள்ளத்தில் இருக்கும் உம் பெயரை
உடலெங்கும் பச்சை குத்திக் கொள்ளட்டுமா.
இல்லையெனில் நீயே சொல்
என் மன்மத மலரே
என்ன செய்தல் வேண்டும்.
எதைத் தருதல் வேண்டும்.

இந்த யாசகி தான்
உனக்கு என்ன தந்திட இயலும்
என்னிடம் இருப்பதெல்லாம்
உனக்கு ஒவ்வாத நானும்
என் அன்பும் மட்டுமே.
வேண்டுமெனில் பெற்றுக் கொள்.
வேண்டாமெனிலும் பெற்றுக் கொள்.

❣

## கடனாளி ஆகாதீர்

காதல் கடன் போன்றது.
முதலில் வாரி வழங்கிவிடும்.
பிறகு வட்டியும் முதலுமாய் கேட்டு
சட்டையைப் பிடிக்கும்
இறுதியில் கடனடைக்க இயலாமையால்
கடனாளி ஊரை விட்டு ஓடும்
அவலம் தான் நடைப்பெறும்.

❣

## காத்திருக்கிறேன்

அவன் அழகன்
நான் ரசித்துத் தீர்க்கும் பேரழகன்
என் ரசனை உணர்வின் ரகசிய
பாதை கண்டறியச் செய்தவன்
அவன் பற்றிய என் கிறுக்கல்கள்
எல்லாம் கவிதைகளாம்
அவன் அழகைச் சொல்ல முற்பட்டால்
அவையெல்லாம் வர்ணனைகளாம்
இழை அழகா அல்ல
அவன் இதழ் அழகா
இல்லை இல்லை
அவனே மொத்தமுமாய்
அழகை உருக்கி சதையோடு
கலந்து செய்த சிற்பம்
புற அழகெல்லாம்
ஒரு புறம் கிடக்கட்டும்

அவன் அக அழகிற்கு
இந்த அண்டப் பெருவெளியை
அடகு வைத்தாலும் ஈடாகுமோ
அழகின் இலக்கணமே அவன்
அவனில் இருந்து களையப்பட்ட
பிழையோ நான்
இலக்கணத்தில் பிழை பூட்டி
இயற்ற முடியுமோ
இல்லை என்னோடு தான் அவன்
மனம் கோர்த்து வாழ இயலுமோ
வாழ இயலா வாழ்க்கையின்
வாசற்படியில் நித்தமும் கோலமிட்டு
கொண்டிருக்கிறேன்
கவிதை அவனின் காலடி தடம்
பதியும் இனிய நாள் எண்ணியே...

❣

**ம்ம்ம்...**

என் ஊன் வலிக்க
அவன் இசை மீட்ட
அந்த விசைக்கு ஒப்ப
நான் கட்டிலில் இசைக்க வேண்டிய
'ம்'கார ராகத்தையெல்லம்
எம் மனம் வலிக்க
அவன் இப்பவே குறுஞ்செய்தியில்
இசைத்துத் தீர்த்து விடுகிறான்.

❣

## கண்ணு வைக்காதீங்க

என் வூட்டுக்காரரு இருக்காரே வூட்டுக்காரரு,
அவரு அம்புட்டு அழகு.
அவரோட உச்சி முடி மொத
உள்ளங் காலு வர எங்க பார்த்தாலும்
என் உடம்பு மயிரெல்லாம் சிலிர்த்து போய்டும்
அம்புட்டு அழகு ராசா அவரு.
உப்பு மிளகா தடவி வெயில காய வச்ச
வஞ்சர மீன எடுத்து
எண்ணச் சட்டில போட்டா
வருமே ஒரு ராகமில்லாம ரசிக்க வைக்கற சத்தம்
அதையும் மிஞ்சி ரசிக்க வச்சுரும்
அவரோட சிரிப்பு சத்தம்.
அவர சும்மா ஏதாச்சு சீண்டுனா போதும்
வெட்கமும்
நடிப்புனு அப்பட்டம்மா தெரியராப்புல
கோபமும் பட்டுக்கிட்டு
திட்டுறாப்புல "அடியேய்" னு
காத்துவாரு பாருங்க...
அவரு சொல்லர அழகுக்கே
எஞ் சொத்து மொத்தமும்
கூடவே என்னையும் சேத்தி
அவரு பெயருக்கு
எழுதி கொடுத்தாலும் பத்தாதுங்க.
இந்த நிலா இல்லாத இராத்திரில எல்லாம்
என் வூட்டுகாரரு கண்ண
பார்த்தே ஈடு செஞ்சுக்கலாம்.

இந்த வரிய மட்டும் அந்த
நடு இராத்திரில
என் வாய் அடக்காம அவரு
கிட்ட சொன்ன போதும்
வானத்துல தொலஞ்ச நிலாவ
எங்கிட்ட தேடிறேனு சொல்லி
விடிஞ்சாலும் அந்த மனுசன்
என்ன விடமாட்டாரு.
அவரு அழகுக்கு திருஷ்டி
பொட்டு வைக்கோனும் னா
கருப்பு சாயத்துல
அவர முக்கி தா எடுக்கோனுங்க.
அது முடியாதுனு சொல்லி தான்
என்னைய கட்டிக்கிட்டாரு போல
அவரு மீசை இருக்கே அப்பப்பா
வார்த்தைல சொல்லிட முடியாது
இம்சிக்கும் சொர்கம் அது
அம்புட்டு அழக ரசிச்சு தீர்தேபொழுது சாஞ்சிடுது
போதும் போதும் நீங்க அவர ரசிச்சது எல்லாம்
கண்ணழகன் அவருக்கு கண்ணு பட்டுற போது
எல்லாரும் இடத்த காலி பண்ணுங்க
அவரு வூட்டுக்கு வர நேரம் ஆயிடுச்சு…

❣

## விரைவில் சிரிக்கிறேன்

அவன் கரங்கள் என்னைப் பற்றி எழுதாதாம்.
அவன் மனம் என்னைச் சுமக்காதாம்.
அவனுக்கு நான் நாட்பட்ட நச்சரிப்பாம்.
அவனும் அவளும் உதிரமும் சிவப்புமாம்.
அவனும் நானும் நெகிழியும் மண்ணுமாம்.
'நாங்கள்' என்பது நடுநிசியின் சொப்பன நாடகமாம்.
எங்கள் காதல் எங்களோடு கட்டி பிறழாதாம்.
மன்னிக்கவும் உணர்ச்சி பிழை.
என் காதல் என்னோடு கட்டிப் பிறழாதாம்.
என் காதல் என்றுமே தெருவோர அனாதை தானாம்.
இவையை நினைத்து வருந்திச் சாகாமல்
பல் இளித்துப் புன்னகைப்பதாம்.
வருந்தாதே என் வீட்டு விண்மீனே
விரைவில் இந்த பேதை
உன் நினைவில் நிலைத்து
என் நிலையைத் தொலைத்து
பயித்தியமாகி விடுவேன்.
அன்று உன் அலாதி விருப்பம்
போல் சிரித்து மகிழ்கிறேன்.

❣

## கருவூலக் கண்கள்

என் கவியின் கரு தோன்றும் அரங்கம்.
மதி பிறழச் செய்யும் மாயச் சொர்கம்.
விடுபட வழியற்ற வாலிப சொரூபம்.
ஒற்றை பார்வை பதிந்திடவே
பயணச் சீட்டின்றி பரவச நிலைக்கு
பயணிக்க வைக்கும் வசீகரம்.
பார்த்தால் நாணத்தால் துடிக்கும்.
பார்க்காவிட்டால் ஏக்கத்தால் தவிக்கும்.
கற்பனை தரணியில் ஆழ்த்தும்.
சில கணத்தில் பல முறை
காதல் கற்பிக்கும்
என்னவனின் கருவூலக் கண்கள்.

❣

## விசன அனல்

பல்லாங்குழி கழுத்தழகா!
பருவ மனதினுள் பட்டை மரத்தில்
பிடித்த தீயாய் பரவிக் கிடக்கிறாயே.
நீ தரும் விசன அனல் தாங்காது
விழிகளுள் கசியும் வியர்வைக்கு
ஈரம் ஏறிய உந்தன் சுவசக் காற்றைச்
சுமக்கும் வார்த்தைகள் மட்டுமே
துயர் நீக்கியாகும்.

❣

## இடம் அளி

உந்தன் யாரோ ஒருத்தி நான்
எந்தன் எல்லாமும் ஆனவன் நீ.
என் இல்லாமையை உணர
இயலா நிலையில் நீ.
உன் இல்லாமையை உணர்ந்தே
என் இருப்பை உணர்பவள் நான்.
நான் அற்ற நாட்களை
செம்பருவம் எய்திய எழிலன்
உன்னால் ஏற்றுக் கொள்ள
இயல்கிறது என்பதே என்னால்
ஏற்றுக் கொள்ள இயலவில்லை.
நாம் என்று ஒன்றுமே இல்லையா.
இன்று தான் இல்லையா
இல்லை என்றுமே இல்லையா.
இல்லாளாய் இல்லாதெனினும்
இதய இல்லத்தில் ஓர் ஆளாய்
வாழ்வதற்காவது இடம் அளி.

❣

## நீயே கதி

இந்த வெயில் தணிந்த இராத்திரியில்
பெய்யும் ரம்மியமான சாரல் மழையைக்
கூட ரசிக்க இயலவில்லை.
ஏதோ தனிமைக்குத் தண்ணீர் ஊற்றி
வளர்ப்பது போன்ற உணர்வு.
தேகத்தை நனைக்கும் ஒவ்வொரு
நீர்த் துளியும் தீயிடாமலே எரிகின்றது.
இந்த நிசப்த தனிமையில்
தழலில் தவிக்கும் புழுவென
மனம் பிறழ்ந்து நெளிந்து
உன்னை வேண்டி
துடித்துக் கொண்டிருக்கிறது.
வெறுமை முழுமையாய் ஊடுருவி
என் எழுத்துகள் கூட கனத்து
உணர்வுகளைக் காகிதத்தில்
மொழி பெயர்க்க அறியாது
முழித்துக் கொண்டிருக்கிறது.
அன்று உன் வரவில்
ஒட்டுண்ணியாய் ஒட்டிய
கவியாற்றல் கூட,
உன் தூரம் கூடிப்போக
இறந்து கொண்டே போகிறது.
விரைந்து வர இயலாதெனினும்
என்றாவதொரு நாள் வந்து விடு.
நீயே கதி எனக் கிடப்பவளுக்கும்
கொஞ்சம் அடைக்கலம் அளித்து விடு.

கொஞ்சியும் மிஞ்சியும் பேசிய
காலம் கடந்து
கடமைக்கென கடுகளவு பேசிய
காலமும் வந்து
என் ஆறுதலுக்கென அரை நேடி
பேசிய காலமும் மறைந்து
இன்று மௌனமே மோட்சம்
எனக் கொண்டிருக்கிறாயே
என் நேசமற்ற நேசகா.
நீ சிக்கனமாய் சிதற விடும்
சிறு வார்த்தைக்காகக் காத்திருந்தே
ஆயுள் அற்பமாய் அழிகிறதே.
எங்கோ தொடங்கிய கவி
வழக்கம் போல் உன் நினைவு
இதையும் ஆக்கிரமித்து விட்டது.
போதுமடா என் வைரமே..
இந்த சோகம் பொங்கும்
என் உணர்வைத் தாங்கும் கவிதைக்கும்
கொஞ்சம் முற்று இட்டு
காதல் வடியக் கவிதை இயற்ற
வழி வகு.

❣

## அருள் பொழிய வேண்டும்

என் மயங்கா மதியும்
காதலின் கோர தரிசனத்தால்
அன்பு ஆதிக்கம் வேண்டி
நின் திருவடிகளின்
சன்னதியில் சரணடைந்து
உச்சம் குளிர்ந்து
உள்ளம் நெகிழ்ந்து போனது.

மாபிணி மருந்தான
நின் பார்வை படர்ந்திட
பாவை எனின் அக கூட்டில்
ஏனோ பசலை நோய் தரித்து
துயர் உறச் செய்கிறது.
தூய எண்ணத்தில்
துளி நஞ்சாய்
நின் விழிகளின்
மாபெரும் திவ்விய ஜோதி கலந்து
காலன் கையில் அகப்படாது
என்னைக் காத்து அருள்கிறது.

பித்தா…

பித்து உறச் செய்யும் மாநேசகா
மானிட பிறவியென பாராது
மாபெரும் பாச வினையை
விழி வழி நிகழ்த்தி
வையத்தில் தேவலோக
காதல் காவியத்திற்கு உயிர் மீட்டி
அக இருளினை அடியோடு
அழியச் செய்து
தூய நேசத்தை விதைத்து வழிபடச் செய்து
ஆன்மாவைச் சிலிர்க்க செய்கிறாய்.

நின் கிட்டா தரிசனங்களும்
கிட்டிய நேச ஆசிகளும்
என்னை ஆட்கொண்டு
ஆழியின் பெரு வெள்ளமாய்
என் இதய வெற்றிடங்களை நிறைத்து
திருவருள் பொழிய வேண்டுகிறேன்.

❣

## ஓவியக்கலை

வண்ணம் தொட்டு
தூரிகை கொண்டு
தாளமின்றி தாளில்
வண்ண ஓவியம் தீட்டிச் சலித்து விட்டேன்.
வாவேன் என் அன்பு மாமனே
உன் மாரைத் தொட்டு
நகத்தைக் கொண்டு
காம ராகத்தோடு
காதல் ஓவியம் தீட்டி
சிவப்பு மை ருசித்து
உன் ஆண்மையை ரசித்து
என் பெண்மையை உணர்ந்து கொள்கிறேன்.

❣

## விழவும் வழி இல்ல

அண்ணாந்து பார்த்தேன்
பரந்த வானம்
குனிந்து பார்த்தேன்
கான்கிரீட் சாலை
தடுக்கினேன்
மோதி நின்றேன்.

❣

## எல்லாமும் நீயே

நீ
நானும் நீ
எனக்கென இருக்கும் என்னுயிரும் நீ
இழந்தே பிறகே அருமை அறியும் தலை மயிரும் நீ
நோயற்ற நிம்மதியும் நீ
அன்புச் சங்கடமும் நீ
என் சௌந்தரியமும் நீ
கிடைக்கப்பெறா சௌபாக்கியமும் நீ
காதல் விருட்சமும் நீ
காம கலசமும் நீ
என் தேகமும் நீ
தேகத்தினுள் ஓடும் குருதியும் நீ
தீரா பசியும் நீ
அதை ஆற்றும் உணவும் நீ
பங்களிக்க மறுக்கும் பாசமும் நீ
தராது அலைய விடும் மோசமும் நீ
காண்பிக்க இயலா காயமும் நீ
அதை நீக்கும் களிம்பும் நீ
தூய பழச்சாறும் நீ
பல நாள் கள்ளும் நீ
சுயம்கொல்லும் போதையும் நீ

என்னை வழி நடத்தும் பாதையும் நீ
சாகா வரமளிக்கும் அமுதும் நீ
கொடுங் கொலை செய்யும் நஞ்சும் நீ
பற்றி எறியும் தழலும் நீ
மெல்ல வருடும் மழைத் துளியும் நீ
உச்சி குளிர வைக்கும் பல்லாக்கும் நீ
மண்ணைக் கவ்வ வைக்கும் பள்ளமும் நீ
கோர வனத்து ஒளியும் நீ
பாலைவனத்து இருட்டும் நீ
இந்தப் பேதையின் கவியும் நீ
வர்ணனைகளின் கருவும் நீ
அனைத்தும் நீயே
நீ மட்டுமே.

❣

## சாமானியனின் ஓய்வு

தாய்ப் பால் பருகி வளர்ந்து
தந்தை மடியில் தவழ்ந்து
நடுத்தர குடும்பம் என்று
நாலு வயதினிலே அறிந்து
ஆசைப் பட்ட பொம்மையைக் கூட
கேட்டு சங்கடப் படுத்திடாத
மேன்மையும் அடைந்து
ஏறாத படிப்பைக் கூட
தலையில் தட்டி ஏற வைத்து
மதில் மேலான பூனை போன்று தவித்து
இறுதியில் பிடித்த படிப்பைப் படித்து
வேலை ஒன்றைப் பிடித்து
காதலில் சற்று களைத்து
திருமண பந்தத்தில் இணைந்து
பிள்ளை செல்வம் பெற்று
அவ்வப்போது சில செருப்படி பெற்று
பேரக் குழந்தைகளோடு குதுகலித்து
குடும்பத்துக்கென உழைத்துக் களைத்து
இன்று ஓய்வு பெற்றேன்
என் இறப்பில்.

❣

## திருமணம் அவசியமா?

ஊடல்கூடல்காதலெனமுக்கோணமாய்
மனம்இணைந்துவாழ்வதைவிடவா
திருமணத்தில்இனிமையைஎய்திடஇயலும்
ஒற்றைஅரிதம்பூசியகயிற்றிலா
நம்வாழ்வைக்கட்டிவைத்திடஇயலும்.
கயிற்றின்வழிமிஞ்சும்பந்தமென்பது
தூயஅர்த்தமற்றதாகும்
மனம்செத்தபிறகு
தாலிக்கயிறும்
மீன் சீக்கிய தூண்டில் கயிறு போலத் தான்
சிக்கலிலிருந்து வெளியேற விரும்பினால்
வாய் கிழிந்து
முக தசை பிளந்து
உதிரம் கொட்டி
இறக்கத் தான் நேரும்
இருந்தால் இருக்கட்டும்

காதல் உள்ள வரை இருக்கட்டும்
உயிர் போகும் வரை இருக்கட்டும்
போனாலும் போகட்டும்
தூரம் போகட்டும்
நீங்கிப் போகட்டும்.
திருமணம் மனதுக்கு இடும்
வேலி போன்றதாகும்
மனம் வேலியற்று திறந்தவெளி போல
அகன்று படர்ந்து விரிந்து இருக்க வேண்டும்
சிறைப்படுத்தி வைப்பது என்பது
சித்திரவதை செய்யும் செயலாகும்.
காதல் செய்யுங்கள்
தீராது செய்யுங்கள்
ஒருவரோடு கொண்டாலும் காதல் தான்
பலரோடு கொண்டாலும் காதல் தான்
பகிர்ந்து கொடுக்கும் திறன் இருப்பின்
பன்மை காதல் புரியுங்கள்
இல்லையெனில் ஒருவருக்கொருவர்க் காதல் செய்யுங்கள்
முடியாத பட்சத்தில்
உங்களை நீங்களே
காதலித்துக் கொள்ளுங்கள்.

❣

# இளைப்பாறா இரவுகளின் சாரல்

எல்லாமும் விளையாட்டுக்குத் தான்
தூக்கி விசிறினால் உடைவதும் இயல்பு தான்
உடைந்த பின் தூரம் எறிவதும் நியாயம் தான்
ஆனால் இந்த பொம்மைக்கு மனம் உண்டு.

❣

அடிபட்ட பின்னும் அழுகி மக்காமல்
மண்ணுக்குச் சுமையாகவே இருக்கும்.
மனம்.

❣

தரையில் கிடக்கும் மயிரெல்லாம்
காலாவதியாகி உதிர்ந்தவை மட்டும் அல்ல.
சிலது விரும்பி வெட்டப்பட்டவையும் தான்.

❣

என் சாம்பலுக்கும்
உன் மணம்.

❣

கோடையின் கொடையாய்
அவன் மாரில் சுரந்த
பன்னீர் துளிகள் எல்லாம்
நான் தலை சாய இருக்கும்
சொர்க மஞ்சத்தின் ஒப்பனைகளாகும்

❣

இனியவன் இல்லாமல்
இன்னும் இருக்கிறேன்.
இளைத்துக் கொண்டே இரக்கிறேன்.
இருந்து கொண்டே இறக்கிறேன்.

❣

உன் மீது காதல் போர் தொடுப்பின்,
எதிர்த்துக் காதலால் வெல்வாயா?
அன்பால் கொல்வாயா?
இல்ல புறம் காட்டிச் செல்வாயா?
என் வீரனே!

❣

ஒவ்வொரு முறையும்
உந்தன் சில்லிடும் சிரிப்பில்
சிதைந்த என்னுயிர்
அதன் உமிழ் நீர் சிதறலாலே
மீட்டெடுக்கப்படுகிறது.

❣

நாடு கெட
சதி வேண்டாம்
சாதி போதும்.

❣

ஊர் ஏசல் அற்று அவளும்
காசற்று அவனும்
இன்புற
நிகழ்த்தும் சடங்கே திருமணம்.
விரக்தி சாலையில்
கோபுரங்களுக்கும் குடிசைகளுக்கும்
ஒரே முறைவாசல் தான்.

❣

உன்னைப் படைத்த பிரம்மன்
பெண்ணாய் இருந்திருந்தால்
உன்னை அகிலத்தினில் அலையவிடாமல்
அவளினுள் அலைய வைத்திருப்பாள்.

ஏழைக்குக் கிடைத்த ஏலக்காய் டீ
போல எனக்கு நீ
பணக்காரனுக்குக் கிடைத்த
பழைய சோறு போல உனக்கு நான்.

❣

வானத்து நிலவின் பற்றாக்குறையால்
அந்த விண்மீன்காரிகள்
என் வையத்து நிலவை
கண்ணடித்து மயக்க பார்க்கிறாள்கள்
சதிகாரிகள்.

❣

சமர்ப்பிக்கப்பட்ட புத்தகம்
வாசித்தாலும் வாசிக்கப்படாவிட்டாலும்
அதன் எழுத்துகள் என்றும் மாறப்போவதில்லை.

❣

## பக்த காதலி

உன்னளவில்
நாம் மானுட மிருகங்களே.
என்னளவில்
என் சாமியும் சாத்தானும் சகலமும் நீயே.
நானுன் மானசிக பக்தையே

பாடலில் நீ இறையாய்  வர்ணிக்கப்படவில்லை
மெய்ப்பட என் வாழ்வின்
உச்சநிலை நீ.

நானுனை அடைதல் வேண்டாம்
நீ என்னுடைமையாதல் வேண்டாம்
எனக்கென எந்தவொரு உரிமைகளும் வேண்டாம்
என்னை உனதாய் ஏற்றால் போதும்.
நாளும் பொழுதும்
தரிசித்தும் வழிபட்டும்
பாடியும் போற்றியும்
வாழ்ந்து முடித்தாலும்
அதுவே போதும்.

நம் இளமை தீர்ந்து
நடை நடுங்கும் காலத்திலும்
என் பக்தியும் காதலும்
துளியளவும் வற்றாது.

வேடிக்கையாய் இருந்தாலும்
எந்தன் இந்த மனித வழிபாடு
தரும் பெருந்திருப்தியை
கற்சிலையினுள் குடியிருக்கும்
இறைவனாலும் தர இயலாது.

நான் தாழ்ந்து போகவில்லை
பணிந்து போகிறேன்
இவையாவும் எவ்வொரு
கட்டளையின் கீழ் நிகழ்வதில்லை
இறைமை கண்ட
என்னுள்ளம் செய்யும் செயல்களே.

பற்று மட்டுமின்றி
காமமும் காதலும்
தளும்பவிருக்கும் பக்த காதலி நான்.
இது எவ்வித தெய்விக காதலும் இல்லை
தெய்வத்தின் மீதான காதல் அவ்வளவே.

பக்தை எனில்
தள்ளி நின்று
ஆசி பெறச் சொல்லாதே
நானுன் சேவகியாய் வாழ்ந்து
காதலியாய் செத்து மடிய வேண்டும்.

❣

## இல்லாமல் இருப்பவன்

நம்முள்ளான வேற்றுமைகள் பல கலைந்து
நான் என்பது நானின்றி நீயாகி
நாளும் வழிபடும் எம்பெருமாளாகி
அவனையும் காத்தருளும் சக்தியாகி
கணமெங்கும் தவிர்க்க இயலா விதியாகி
விதியின் துணையான வழியாகி
வழியின் தேவையான தேடலாகி
தேடலின் தொடரான பிறப்பாகி
பிறப்பின் எல்லையான இறப்பாகி
இறப்பின் பொருளான வாழ்வாகி
வாழ்வின் அர்த்தமான அன்பாகி
அன்பின் நிறைவான இருப்பாகி
இருப்பின் முடிவான மோட்சமுமாகி
என் எல்லாமுமாகி
இல்லாமல் இருக்கிறாய் நீ.

❣

## மீண்டும் மணந்துக் கொள்

ஊரின் ஏசல் எல்லாம்
செவி வழி நுழைந்து
இதயம் கனத்து
உயிர் பாரமாகிறதே.
வாழத் தகவு அற்றவள் என
பார்ப்போர் எல்லாம்
பழிப்பது போல் இருக்கிறதே.

நின் முத்தம்  பெற்ற என்னால்
முத்தெடுக்க முடியவில்லையே.
சுகம் அளிக்கும் என்னால்
சிசு அளிக்க முடியவில்லையே.
பெண்மை வளர்க்க
நான் சிந்தும் உதிரம் எண்ணி
இன்று சித்தம் கலங்குதே.

அடி வயிற்றில் வலி பெருகி
குருதி கொட்டாது இருத்தல் வேண்டி
மாத மாதம் மண்டியிடும் நான்
அந்தக் கற்சிலையின்
கண்ணுக்குத் தெரியவில்லையோ.
நீயும் விட்டு விலகி விடு தங்கமே.
நானே உன் குழந்தையென சொல்லி
இந்த மலடியோடு மல்லுக்கட்டாதே.
மாலையிட்ட கரத்திற்கு
மழலை தர இயலாதவளோடு
மனம் முடிச்சு இட்டுக் கொள்ளாதே.

நம் கூடல் வைத்து எல்லாம்
குடும்பம் என்னும் கூடு கட்ட இயலாதே.
என் சபிக்கப்பட்ட உறையில்
பிண்டம் ஒன்று தங்காதே.

தளிர் இடாத செடியை
தாங்கி நிற்காதே.
தாய்மை அடைய இயலாத என்னை
என் தாய் போல் சுமந்து செல்லாதே.

தாலி எல்லாம் குடும்பம் தழைக்கத் தான்.
என் போன்ற பாரம் தழைக்க அல்ல.
காலம் கரும்பின் இனிப்பாய்
விரைந்து கரைந்து கொண்டிருக்கிறது.
சக்கையாய் ஆவதற்கு முன்
தகுந்தவளை மணந்து
மகவு பெற்றுக் கொள்.

❣